பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 09 ஞாயிற்றுக்கிழமை (24.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 29

# முல்லைத்தீவை அண்டிய கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருக்கும் கப்பல்!

## இந்தியாவிலிருந்து தென்னாபிரிக்காவுக்கு அரிசி கொண்டு சென்றவேளையில் சம்பவம்

கொழும்பு,டிசெ.24

இந்தியாவிலிருந்து தென்னாபிரிக்கா டேர்பனுக்கு 14,000 தொன் அரிசியை ஏற்றிக்கொண்டு சென்ற கப்பல் -

இயந்திரம் பழுதடைந்த நிலையிலும் கடற்கொந்தளிப்பாலும் சர்வதேசக் கடல் எல்லையில் இருந்து முல்லைத்தீவுக் கடற்பரப்பை அண்டிய பகுதியில் -

தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

நேற்று அதிகாலை 3மணியளவில் தத்தளிக்கத் தொடங்கிய கப்பல் இப்போது கடல் நீரோட்டத்தில் தள்ளப்பட்டு அசைந்து கொண்டிருப்பதாகவும் பிந்திய செய்திகள் தெரிவித்தன.

ஜோர்டான் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான 'பாறா 3' என்ற இக் கப்பலில் பணிபுரிந்த 25 மாலுமிகளையும் தாம் காப்பாற்றிக் கொண்டு வந்துள்ளதாகவும்-

அவர்களை இன்று சர்வதேச செஞ்சிலுவைக் குழு மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கையளிக்க உள்ளதாகவும் விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இது ஒரு கடற்கொள்ளைச் சம்பவம் என்று கடற்படைப் பேச்சாளர் அட்மிரல் டி.கே.எஸ்.திஸநாயக்கா தெரிவித்தார். [அ-1]

## புலிகள் நடத்திய கடற்கொள்ளை இது

**கடற்படைப் பேச்சாளர்**

இது ஒரு கடல் கொள்ளைச் சம்பவம். அவர்கள் தங்களின் ஆயுதங்களைப் பயன்படுத்தி கப்பலைக் கைப்பற்றியுள்ளனர். இதனை பிரிட்டனில் உள்ள கடல்சார் உதவி ஒருங்கிணைப்பு மையமும் உறுதிப்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகள், கப்பல் தங்கள் பகுதியில் இருந்ததாகக் கூறுவது தவறாகும். கடற்பரப்புத் தொடர்பாக போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் எதுவும் கிடையாது. அவர்களுக்குக் கடல் மீது உரிமை கிடையாது.

இவ்வாறு கடற்படைப் பேச்சாளர்

(08ஆம் பக்கம் பார்க்க)

## 25 மாலுமிகளையும் கடற்புலிகள் காப்பாற்றினர்

**புலிகளின் இராணுவப் பேச்சாளர்**

கிளிநொச்சி,டிசெ.24

முல்லைத்தீவுக் கடற்பகுதியில் பழுதடைந்து தத்தளித்துக் கொண்டிருந்த வணிகக் கப்பலின் 25 மாலுமிகள் கடற்புலிகளால் காப்பாற்றப்பட்டுள்ளனர் என்று புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்தார்.

சர்வதேசக் கடற்பரப்பில் இருந்து கப்பல் ஒன்று முல்லைத்தீவுக்கு நேரான கடற்பரப்பில் நேற்றுக்காலை தத்தளித்துக்கொண்டிருந்தமை கடற்புலிகளால் அவதானிக்கப்பட்டது.

கடற்படைக் கலங்களும் அப்பகுதியில்

(08ஆம் பக்கம் பார்க்க)

## நத்தார்தின நள்ளிரவு ஆராதனை ஆயர் தலைமையில் பேராலயத்தில்

குருநகர்,டிசெ.24

நத்தார்தின நள்ளிரவுத் திருப்பலி இன்று நள்ளிரவு 11.45மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

யாழ். ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம் இந்தத் திருப்பலியை ஒப்புக் கொடுப்பார்.

நள்ளிரவுத் திருப்பலியைத் தொடர்ந்து நாளை அதிகாலை 6மணிக்கு முதலாம் திருப்பலியும் காலை 7மணிக்கு இரண்டாம் திருப்பலியும் இடம்பெறவிருக்கின்றன.

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலும் இன்று நள்ளிரவு 11.45 மணிக்கு நள்ளிரவுத் திருப்பலி இடம்பெறவிருக்கின்றது. இரண்டாம், மூன்றாம் திருப்பலிகள் நாளை அதிகாலை 5.30மணிக்கும், காலை 7மணிக்கும் முறையே இடம்பெறும். (அ-1-51)

## ஆயிரம் பொதிகளில் பாடநூல்கள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம்,டிசெ.24

குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களுக்கான பாடநூல்கள் ஆயிரம் பொதிகளில் நேற்று வந்து சேர்ந்தன.

அரச அதிபர் கே.கணேஷ் இத்தகவலைத் தெரிவித்தார்.

''மேர்ச் றுகுணு'' என்ற கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டு நேற்று முன்தினம் பாடநூல்கள் இறக்கப்பட்டன என்றும் -

அவற்றில் 928 பொதிகளில் எடுத்து வரப்பட்ட பாடப்புத்தகங்கள் நேற்று யாழ். வலயப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்றும் - அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

மேலும் 75 பொதிகளில் உள்ள பாடப் புத்தகங்கள் இன்று வலயப்பணிப்பாளரிடம் கையளிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (அ-1)

## வாகரை மருத்துவமனையை அண்டிய பகுதியில் ஷெல் தாக்குதல்

கிளிநொச்சி,டிசெ.24

வாகரை மருத்துவமனை, அதனை அண்டிய பகுதிகளை இலக்குவைத்து நேற்று ஆட்லறி மற்று ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

வாகரைக்கு வடக்காக உள்ள திருகோணமலை, கல்லாறு படைமுகாம்களில் இருந்தும் வாகரைக்கு மேற்காகவுள்ள கரடிக்குளம் இராணுவ முகாமில் இருந்தும் தெற்காகவுள்ள வாழைச்சேனை முகாமில் இருந்தும் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்றுக்காலை 6.30 மணிமுதல் நடத்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணத்துக்கு தனியான ஆளுநர்

### ஜனாதிபதி முன் பதவிப்பிரமாணம்

கொழும்பு,டிசெ.24

கிழக்கு மாகாணத்துக்கான ஆளுநராக றியல் அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரம நேற்று முன்தினம் ஜனாதிபதி முன் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் வடக்கு - கிழக்க மாகாண ஆளுநராக இது வரை பதவிவகித்து வந்தார்.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு இணங்க வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தனித்தனியாகப் பிரிக்கும் நடவடிக்கைகளின் அடிப்படையில் - கிழக்கு மாகாணத்துக்கான ஆளுநர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்துக்கான பதில் ஆளுநராகவும் விஜயவிக்கிரம நியமிக்கப்பட்டுள்ளார். (அ-1)

## இன்றும் நாளையும் ஊரடங்கு முற்றாக நீக்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.24

நத்தார் தினத்தை ஒட்டி இன்றும் நாளையும் ஊரடங்குச் சட்டம் முழுமையாக நீக்கப்படுவதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் நேற்றிரவு தெரிவித்தது.

நள்ளிரவு ஆராதனைகளில் மக்கள் ஈடுபட்டுக்கொள்ள வசதியாகவும், நத்தார் தினத்தைக் கொண்டாட உதவும் வகையிலும் ஊரடங்கு முழுமையாக நீக்கப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## பழம்பெரும் ஈழத்தமிழ் அரசியல் தலைவர் நவரத்தினம் கனடாவில் காலமானார்

மொன்றியல்,டிசெ.24



தமிழர் சுயாட்சிக் கழகத்தின் தலைவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான பழம்பெரும் ஈழத்தமிழ் அரசியல் தலைவர் வி. நவரத்தினம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கனடா, கியூபெக் மாகாணத்தின் மொன்றியலில் காலமானார்.

95வயதான அமரர் நவரத்தினம் ஊர்காவற்றுறை கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் பழைய மாணவரான அவர் பிரபல சிவில் வழக்கறிஞராவார். 58வருடங்களாக அ[illegible]

(08ஆம் பக்கம் பார்க்க)

## திக்கத்தில் மோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.24

வடமராட்சி திக்கம் மானாட்டியில் அமைந்துள்ள காவலரண் மீது நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர். சேதவிவரங்கள் தெரியவரவில்லை. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகேஸ்வரி (தங்கப்பவுண்) ஞானசுந்தரம்



கலட்டியைப் பிறப்பிடமாகவும் வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி ஞான சுந்தரம் நேற்று (23.12.2006) சனிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானசுந்தரத்தின் (ரீ மேக்கர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தியாக ராசா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான கந்தசாமி - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவசுந்தரம் மற்றும் சிறி மனோகரன் (முன்னாள் யாழ்ப்பாண ஐக்கிய வியா பாரச் சங்கச் செயலாளரும், பொது முகாமையாளரும்), செல்வசுந்தரம் (முன்னாள் முகாரி - காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்), ஜெயசுந்தரம் (கனடா), பாலசுந்தரம் (ஜேர்மனி), பிறேமரதி, மோகனசுந்தரம் (வேலைப்பகுதி - யாழ். மாநகரசபை), ரவிசுந்தரம் (பிரதேச செயலகம் - தெல் லிப்பழை), யோகசுந்தரம் ஆகியோரின் அன்புத் தாயும் தவமணி, செல்வ மணி, பத்மினி (கனடா), செல்வராணி (ஜேர்மனி), ஸ்ரீபாலா (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்), கலாவதி, வாசினி, சுதர்சினி (ஆசிரியை கொட்டடி நமசிவாய வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும் தர்சினி (லண்டன்), சுதர்சன் (பொறியியலாளர்), ரசிதரன், ரசிகாந் (ஜனசக்தி காப்புறுதிக் கூட்டுத் தாபனம்), ரசிக்குமார், ரசிதாஸ், ரவிதா (ஜேர்மனி), அஜித் (ஜேர்மனி), வாத் ஸல்யன் ( தொழில்நுட்ப உத்தியோகத்தர் - நிகொட் - யாழ்.), அர்ச்சனா (சணச அபிவிருத்தி வங்கி - வவுனியா), கௌசிகன் (பொறியியற்பீடம் - பேராதனை), பவஹரிணி (வேம்படி மகளிர் கல்லூரி), திவ்யபாரதி (வேம்படி மகளிர் கல் லூரி), சயந்தன், சஜீவன், யதுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2006) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

461, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 9020.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## முருகேசு பரமலிங்கம்

(உரிமையாளர் - லிங்கம் றேட் சென்ரர் பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம்)



காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவருமான முரு கேசு பரமலிங்கம் 20.12.2006 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாணந்துறை முரு கேசு - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும் ரி.பி. செல் லத்துரை - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் கிருஸ்ணவேணியின் பாசமிகு கணவரும் பிரபாகரன் (கனடா), வத்ஷலா (லண்டன்) சசிகலா (கனடா), முரளிகரன் (Print House Colombo), கௌசலா (நோர்வே), சுதாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தகுமாரி, சிவஞானகுமார், கணேநாதன், ஜெயநாதன் ஆகியோரின் அன்பு மாமனும் பிரவீன், அங்கஜன், அனந்தன், ஹிரிஸ்சன், அஸ்வினா ஆகியோரின் அன்புப் பேரனும் பரமேஸ்வரி, சிவபாக்கி யம், கனகலிங்கம், அன்னலட்சுமி, புஸ்பலீலா ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் 23.12.2006 முற்பகல் 9 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 267, ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு - 13.
தொ.பே. 011 4617782,
0777 555327.

தகவல்:
மனைவி (கீதா),
பிள்ளைகள்.

(63744)

## சுவாமிநாதன் நகுலேஸ்வரர்



கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதன் நகுலேஸ் வரர் நேற்று (23.12.2006) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன் புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் பொன் னம்பலம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமக னும் வேதநாயகாம்பாள் (டென்மார்க்), மினாம்பாள், சதாநந்தயோகீஸ்வரன் (கொழும்பு), கமலாம்பாள் (கொழும்பு), காலஞ்சென்ற ஞானசம்பந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தை யும் இலங்காதிலகம் (டென்மார்க்), இராமச்சந்திரன், உருத்திராதேவி (கொழும்பு), சரவணபவன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர் களான சுப்பிரமணியம், அம்பலவாணர் மற்றும் கனகசபை, மயில்வாகனம், சிவ காமிப்பிள்ளை, ஞானசௌந்தரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனுமா வார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் இன்று (24.12.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரி யைக்காக பொரளை கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.8A, டி பொன்சேகா வீதி,
கொழும்பு - 04
தொ.பே. 0112 501427.

தகவல்:
இ. மீனாம்பாள் (மகள்),
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(63726)

## இராசா திருஞானசம்பந்தர் (சாம்)

(ஓய்வுபெற்ற P.W.D. ஓவசியர்)



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், வசிப் பிடமாகவும் கொண்ட இராசா திருஞானசம்பந்தர் 22.12.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஞானாம்பிகையின் அன்புக் கணவரும் சத்தியவதியின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர் களான டாக்டர் இராசா - சுந்தர இராமாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - கண் மணியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற திருமதி சிவபாக்கியம் பொன்னம்பலம் காலஞ்சென்ற திருமதி மகேஸ் வரி நவசிவாயம்பிள்ளை காலஞ்சென்ற மாணிக்கவாசகர் (அட்வகேற் - கொழும்பு), சட்டத்தரணி விசுவாநாதன் (அவுஸ்திரேலியா), (முன்னாள் யாழ். மாநகர மேயர்) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற பொன்னம்பலம் (P.W.D. Inspector) காலஞ்சென்ற நமசிவாயம்பிள்ளை (பொறியியலாளர் - தபால் திணைக்களம்), காலஞ்சென்ற புஸ்பவதி, தவமணி (ஓய்வுபெற்ற ஆசிரியை - யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரி யைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

இல. 494, கே.கே.எஸ்.வீதி,
தட்டாதெரு,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, மகள்

(63730)

## நடிகமணி செல்வம் ஜேர்மனியில் மரணம்

யாழ்ப்பாணம்,டிசெ.24

அரியாலையைச் சேர்ந்த நடிகமணி வ.செல்வரத்தினம் நேற்று முன்தினம் ஜேர் மனியில் காலமானார்.

காங்கேசன்துறையைச் சேர்ந்த நடிகமணி வி.வி.வைரமுத்துவின் "அரிச்சந்திர மயாண கண்டம்" நாடகத்தில் சந்திரமதி பாத்திரம் ஏற்று நடித்து பெரும் புகழ்பெற்றவர்.

பல்வேறு நாடகங்களில் அவர் பெண் பாத்திரம் ஏற்று நடித்து தனது திறமையை வெளிக்காட்டியிருந்தார்.

(1)


யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்

### முக்கிய அறிவித்தல்

வெதுப்பகங்கள் ஊடாக கேக் உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக அரச அதிபரால் கேக் உற்பத்திக்கான பொருள்கள் வழங்கப்படவுள்ளதால் சகல அங்கத்தவர்களும் முற்பகல் 10.30 தவறாது சங்கத்துக்கு சமுகமளித்து பெற்றுக்கொள்ளவும்.

1 Kg கேக்கின் விற்பனை விலை 350/-
குறிப்பு: இன்று மட்டும் வழங்கப்படும்.

யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்.

### வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தையில் ஹபிடல் லேனில் மிகவும் நவீன முறையில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் விற்பனைக்குண்டு. Air Condition இணைப்புகளும் உயர்தர Architect இனால் கட்டப்பட்ட 02 Bed Room, 03 Bed Room வீடுகள் உள்ளன. உடனே குடி புகலாம். விலை 50 இலட்சத்திலிருந்து.

தொடர்புகளுக்கு:
0777 271222.


## 2ஆம் வருட நினைவஞ்சலி



ஜெ. கிறிஸ்ரீன் அபிஷா ஜெ. கிறேஸ்வர்ஷா

மண்ணுலகில்
1998.02.21 — 2004.11.27

இயேசுவின் பாதங்களில்
2004.12.26

உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்கிறவன்
மரித்தாலும் வாழ்வான்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

R.ஜெயராசா குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை சின்னையா

(சின்னத்துரை)

அரியாலை, புறூடி ஒழுங்கையைப் பிறப்பிட மாகவும் கொழும்பு மருதானையை வசிப்பிட மாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சின்னையா (சின்னத்துரை)19.12.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - முத் தாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பாபிள்ளை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் பராசக்தியின் (சந்திரா) அன்புக் கண வரும் கலா, இராசன், ஜீவா, மோகன், மோகனா, இலிங்கன், லாமினி, பாமினி ஆகியோரின் அன் புத் தந்தையும் மகாலிங்கம், சிறீ, சுதன், சுமணன், திபா, சுஜாத்தா, இங்கர் ஆகியோரின் அன்பு மாம னும் ஷேஷனா, ஹரிபிரஷன், பீஷ்மன், பிரஜா, பிரி யங்கா, தணிகன், சுருதி, சிந்தி, ஷேஷினி ஆகியோ ரின் அன்பு பேரனும் அமரர்களான செல்லையா, இரத்தினசிங்கம், சின்னம்மா மற்றும் பவளம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் நட ராசா மற்றும் கிருஷ்ணபிள்ளை, சரஸ்வதி, இராச நாயகி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவ ரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தனக்கிரி யைக்காக பொறளை கனத்தை இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

34, பவுண்டேசன் கவுஸ்லேன்,
டீன்ஸ் றோட், மருதானை,
கொழும்பு - 10
தொ.பே. 0114 957313.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(59663)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10
05
1979



மறைவு
24
12
2000

### அமரர் கனகலிங்கம் சுரேஸ் (கண்ணன்)

ஆறு ஆண்டு ஓடி மறைந்தாலும் ஆறிடுமோ எம் துயரம் ஈரைந்து மாதங்கள் கருவறையில் உன்னை சுமந்து இத்தனை பேர் நாமி ருந்தும் தனித்து தவித்திரோ - எம்குடும்பக் கொடியில் பூத்த தமிழ் பூவே இன்று பனிக்குளிர் பட்டு உதிர்ந்து போனதேனோ சாவை நீ அழைத்து சரித்திரமாய் போய் விட்டாய் கண்ணா

பாரதி வீதி,
கோண்டாவில் மேற்கு.

பிரிவால் துயருறும் :
தாய், தந்தை, சகோதரிகள், மருமக்கள்,
சகோதரர்கள், மைத்துனர்கள், உற்றார், உறவினர்.

(63518)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### குமாரகுலசிங்கம்சிவநாதன்

(முன்னாள் நெல் சந்தைப்படுத்தும் சபை ஊழியர்)

மண்ணில்: 16 . 11 . 1946
விண்ணில் 24 .11 . 2006

மாதம் ஒன்று கடந்தாலும்
மறக்க முடியாது உங்கள் நினைவுகளை
திடீரென்று ஒரு நாள் மறைந்தீர்கள்
தீராத கவலையுடன் என்றும் நாம்
நினைவு கூருகிறோம்.

திதி : சதுர்த்தி

சோதி வேம்படி லேன், மானிப்பாய்.

குடும்பத்தினர்.

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### குமரேசு சதாசிவம்

தோற்றம்: 19.08 . 1943
மறைவு: 29 .12 . 2000

எமது குடும்ப ஒளி விளக்கின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

புதுவளவு, தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

(63511)

# மரண அறிவித்தல்கள்

## T.S.அப்புத்துரை

(ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியர்)



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் பண்ணா கம், இணுவில், திருகோணமலை, சுன்னாகம் ஆகிய இடங்களில் தற்காலிகமாக வசித்தருமாகிய T.S.அப் புத்துரை 20.12.2006இல் இறைவனடி சேர்ந்துவிட் டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2006) ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணிக்கு நடைபெற்று, பூத வுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சுகந்தம்" இல்லம்,
வன்னியசிங்கம் வீதி,
இணுவில் தெற்கு, இணுவில்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## திருமதி ஜெகநாதன் சிவவதனி

(ஆசிரியர், உருத்திரபுரம் மகாவித்தியாலயம், கிளிநொச்சி)



உடுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பி டமாகவும் கொண்ட திருமதி ஜெகநாதன் சிவவதனி 21.12.2006 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஜெகநாதனின் அன்பு மனைவியும் திரு.திருமதி கோபால் (ஊழியர், லங்கா சீமெந்து கூட்டுத்தாபனம்) தம்பதியரின் அன்பு மகளும் திரு. திருமதி தர்மகுலசிங்கத்தின் அன்பு மருமகளும் மயூ ரகுமார் (கொழும்பு), புஸ்பவதனி (கலா) ஆகியோ ரின் அன்புச் சகோதரியும் சின்னையா (ஊழியர், லங்கா சீமெந்து கூட்டுத்தாபனம்), சுப்பிரமணியம் ஆகி யோரின் பெறாமகளும் சித்ரா, விசாகன், ரவி, தேவா, செல்வி, சிவா, அமிர் தன், குமரன், உஷா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2006) ஞாயிற்றுக்கி ழமை பிற்பகல் 2 மணியவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூத வுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகமூர்த்தி கோயிலடி,
உடுவில் தெற்கு,சுன்னாகம்.

தகவல்:
த.ஜெகநாதன் (கணவர்)
க.கோபால் (தந்தை).

## திருமதி மாணிக்கம் பாலசுப்பிரமணியம்



இடைக்காடு, அச்சுவேலியைப் பிறப்பிடமாக வும் மாரீசங்கூடல், இளவாலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் பாலசுப்பிரமணியம் (18.12.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல் லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாரீசன்கூடல்,
இளவாலை.

தகவல்:
பாலசுப்பிரமணியம் (கணவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொ.ஐ.முன்னணி கூட்டணியில் மகிந்த சிக்குண்டிருக்கும்வரை இந்தியாவின் அரசியல் சூத்திரத்தில் அவர் சேரமுடியாது!

**இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பொருத்தமான ஆலோசனைகளை வழங்கவென நியமிக்கப்பட்ட சர்வகட்சி நிபுணர்கள் குழுவால் கையளிக்கப்பட்ட 'ஏ' அறிக்கையின் விவரங்கள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை. அதற்கு முன்னரே மிகச் சூட்சுமமான வகையில் இந்திய ஊடகமொன்றினால் பகிரங்கப்படுத்தப்பட்டமை நாட்டில் பெரும் சர்ச்சையைத் தோற்றுவிக்கக் காரணமாக அமைந்துவிட்டது.**

**அந்தவகையில் 1984 ஆம் ஆண்டில் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக முன்வைக்கப்பட்ட 'சீ' இணைப்பின் விவரங்கள் முன்கூட்டியே வெளியானதன் பின்னணியில் இந்திய அரசு செயற்பட்டிருந்தது என நிலவிய சந்தேகம் போன்றே இந்தத் தடவையும் அண்மையில் வெளியான 'ஏ' அறிக்கையின் விவரங்களும் முற்கூட்டியே வெளியானதன் பின்னணியில் இந்திய அரசே செயற்பட்டிருந்திருக்கமுடியும் என்ற பார்வையில் அமைந்துள்ள இக்கட்டுரை கடந்த 21 ஆம் திகதி 'லங்காதீப' நாளிதழில் பிரசுரமாகியுள்ளது.**

**'லங்காதீப' பத்திரிகையின் வியாழன் அலசல் பகுதியில் பிரசுரமான இந்தக் கட்டுரையின் தமிழ்வடிவம் இங்கே தரப்படுகிறது.**

ஒற்றையாட்சி மஹிந்த + தமிழீழம் பிரபாகரன் = யுத்தம்

சமஷ்டி ஆட்சி மஹிந்த +தமிழீழம் பிரபாகரன்=சமாதானம்

மேற்கண்ட விதத்திலேயே இன்று இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான சர்வகட்சி நிபுணர்கள் குழு தயாரித்த தீர்வு யோசனைக் கொத்துகள் 'ஏ', 'பி' மற்றும் 'சீ' என்பவற்றையும் இலங்கை அரசியலையும் இந்திய அரசு கணக்கிட்டுப் பார்க்க முயல்கிறது.

மேற்குறித்த தனது கணக்கீட்டின் அடிப்படையில் இலங்கை அரசியல் குறித்து கீழ்க்காணும் விதத்தில் கணக்கைச் சமன் செய்ய எண்ணுகிறது போலும்;

சமஷ்டி ஆட்சி மஹிந்த + சமஷ்டி ஆட்சி ரணில்=வெளிநாட்டு ராணுவ ரீதியிலான மத்தியஸ்தம்.

ஒற்றையாட்சி மஹிந்த +ஒற்றையாட்சி ஜே.வி.பி.+ஒற்றையாட்சி ஜாதிக ஹெல உறுமய =வெளிநாட்டு அரசியல் ரீதியிலான மத்தியஸ்தம்

ராணுவ ரீதியிலான வெளிநாட்டு மத்தியஸ்தத்தின் மூலமான எதிர்பார்ப்பு, தமிழீழக் கோரிக்கையைத் தோற்கடிப்பதாகும். அதேசமயம் அரசியல் ரீதியிலான வெளிநாட்டு மத்தியஸ்தத்தின் மூலமான எதிர்பார்ப்பு ஒற்றையாட்சி என்ற நிலைப்பாட்டைத் தோற்கடிப்பதாகும்.

அந்தவகையில், இந்தியா விரும்பும் வகை

## அதனால் அவரது அரசியல் சாதக பலன் பெரும் கஷ்டநிலைக்குக் கொண்டுசெல்லும்

யிலான தீர்வு கீழ்க்காணும் வகையிலேயே அமைந்தாகவேண்டும்.

**ரணில் + பௌச்சர் + சொல்ஹெய்ம் + நாராயணன் + ? = சமஷ்டி ஆட்சி**

தீர்வுயோசனைக் கொத்து 'ஏ'+மஹிந்த +ரணில்+இந்திய வெளியுறவுத்துறையைச் சேர்ந்த நாராயணன்+அமெரிக்க அரசுப் பிரதிநிதி பௌச்சர்+ நோர்வே அமைச்சர் சொல்ஹெய்ம்=சமஷ்டி ஆட்சி முறை.

ஆனால், இக்கணக்கீடு கீழ்க்காணும் விதத்தில் அமைய நேர்ந்தால் இந்தியாவால் தான் விரும்பும் வகையிலான தீர்வை எட்ட இயலாதுபோய்விடக்கூடும்.

தீர்வு யோசனைக் கொத்து 'பி'+மஹிந்த +ஜே.வி.பி.+ஜாதிக ஹெல உறுமய+பாகிஸ்தானின் வலி மொகமட்=ஒற்றையாட்சி நடைமுறை.

மேற்கண்ட எண்கணித சூத்திரம் தலைதூக்கி வெளிவருவதற்கு முன்பாக, இந்தியா முந்திக்கொண்டு தனது எண்கணித சூத்திரமொன்றை உருவாக்கிக்கொண்டுள்ளது.

### இந்தியா உருவாக்க விரும்பும் தீர்வுயோசனை

இலங்கையின் சர்வகட்சி நிபுணர்கள் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவை இந்தியாவுக்கு வரவழைத்து இந்தியாவில் நடைமுறையிலிருக்கும் பஞ்சாயத்து நிர்வாக நடைமுறையைக் காட்டி விளக்கியதன் மூலம் இந்திய அரசு தனது எண்கணித சூத்திரத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது.

1987 ஆம் ஆண்டில் தான் முன்வைத்த இந்திய-இலங்கை ஒப்பந்தயோசனைக்கு ஆதரவு திரட்ட இந்திய அரசு பயன்படுத்திக்கொண்ட இலங்கையின் இடதுசாரிக்கட்சிகளின் இருதலைவர்களிலொருவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஆவார். அவர்களில் மற்றையவர் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான டியூ குணசேகரா ஆவார்.

அதே போன்று சந்திரிகாவின் தலைமையின் கீழ் சுதந்திரக்கட்சிக்குள் விரிவானவகையில் அதிகாரங்களைக் பரவலாக்கும் முயற்சியில் இணக்கப்பாடொன்றை உருவாக்கும்பொருட்டு இந்தியா சமசமாஜக் கட்சியையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் பயன்படுத்திக் கொண்டிருந்தது. அந்தவகையில், 1995 ஆம் ஆண்டில் சந்திரிகா முன்வைத்த திட்டமே அந்தத் தீர்வுப்பொதியாகும். அந்தவகையில், இம்முறை இவ்விரு தலைவர்களையும் இந்தியாவுக்கு வரவழைத்து 1987 ஆம் ஆண்டின் இந்திய- இலங்கை ஒப்பந்தத்துக்கும் 1995 ஆம் ஆண்டின் தீர்வுப் பொதிக்கும் அடிப்படையாய் அமைந்த 1984 திம்புப் பேச்சுகளில் முன்வைக்கப்பட்ட 'சீ' இணைப்பையே இந்தியா இவ்விரு தலைவர்களுக்கும் எடுத்துக்காட்டி விளக்கமளித்தது. சரி, இந்தச் 'சீ' இணைப்பு என்பது தானென்ன?

### 'சீ' இணைப்பின் தாக்கம்

1984 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 10ஆம் திகதி ஜே.ஆரின் அரசு கூட்டிய சர்வகட்சி மாநாட்டின் முடிவிலேயே இந்தச் 'சீ' இணைப்பு பகிரங்கப்படுத்தப்பட்டது.



மஹிந்தா ரணில்

இந்தியப் பிரதமரின் விசேட பிரதிநிதி ஜி.பார்த்தசாரதியால் தயாரிக்கப்பட்டதே இந்த 'சீ' இணைப்பாகும்.

குறிப்பிட்ட அந்தச் சர்வகட்சி மாநாட்டில் மூன்று வித இணைப்புகள் வெளிக்கொணரப்பட்டன. அவை 'ஏ', 'பி' மற்றும் 'சீ' இணைப்புகள் எனவும் அடையாளப்படுத்தப்பட்டன. உண்மையில் சர்வகட்சி மாநாடு மட்டுமல்லாது முழு நாடுமே

## பார்த்தசாரதியின் 'சீ' இணைப்பும் நிபுணர் குழுவின் 'ஏ' யோசனையும்

தீப்பற்றிக்கொண்டமைக்கான காரணமே இந்தச் 'சீ' இணைப்புத்தான்.

உபுல் யோசப் பெர்னாண்டா

வடக்குக் கிழக்கு மாகாணங்களின் இணைப்பின் மூலம் தனியான நிர்வாகக் கட்டமைப்பொன்றை உருவாக்குதல் உட்பட சமஷ்டி நிர்வாக நடைமுறைத் திட்டத்தை முன்வைத்த ஆசிய வட்டகைச் சங்கம் தலைதூக்கி முன்னிலையுற்றமை இந்தச் 'சீ' இணைப்பினூடாகவே ஆகும்.

மிக இரகசியமான முறையிலேயே இந்தச் 'சீ' இணைப்பு வெளிவரநேர்ந்தது. அவ்விதம் 'சீ' இணைப்பு வெளிவந்ததையடுத்து அதற்கெதிரான உணர்வலைகள் நாடளாவிய ரீதியில் தீவிரம் பெற்றன. அத்தகைய தீவிர எதிர்ப்புக்கு முகங்கொடுக்க இயலாதநிலையில் ஜே.ஆரின் அரசு அந்தச் 'சீ' இணைப்புக்கும் அரசுக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாதெனப் பகிரங்கமாக-உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கவேண்டியதாயிற்று.

### 'சீ' இணைப்பின் தோற்றம் - இந்தியாவே

அந்தவேளை முதல் இந்தச் 'சீ' இணைப்பின் பிறப்பின் இரகசியம் குறித்துத் தேடிக்கண்டறியும் முயற்சிகள் ஆரம்பமாகின. இந்தச் 'சீ' இணைப்பின் பிறப்பின் இரகசியம் வேறெங்குமல்லாது இந்தியாவிலேயே உருப்பெற்றிருந்தது. இந்தச் 'சீ' இணைப்பு விடுதலைப் புலிகள் உட்பட்ட தமிழ் ஆயுத அமைப்புகள் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கும் [illegible] இடையேயான [illegible] தயாரிக்கப்பட்ட ஆவணம் என்பதை எவரும் அவ்வேளையில் அறிந்திருக்கவில்லை.

### 'சீ' இணைப்பும் ஜே.ஆரும்

1983 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இந்தியாவுக்குச் சென்றிருந்தவேளையில், அந்த வேளையில் இந்தியப் பிரதமராகவிருந்த இந்திராகாந்தி தமது ஆலோசகர்களையும் உடன்வைத்



ஜே.ஆர் பார்த்தசாரதி

துக்கொண்டு சர்வகட்சி மாநாடொன்றைக் கூட்டி 'சீ' இணைப்புக் குறித்துப் பேச்சு மேற்கொள்ளுமாறு ஜே.ஆரை வற்புறுத்தினார். இந்தியாவின் இத்தகைய வற்புறுத்தலின் மத்தியில் ஜே.ஆர். முறையற்ற உறவின்மூலம் பிறந்த குழந்தைபோன்ற 'சீ' இணைப்பைப் பேச்சுமேசையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள ஒப்புக்கொள்ளவேண்டியதாயிற்று.

ஆனாலும், அந்தச் 'சீ' இணைப்பு பேச்சுமேசையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னரே அந்தச் 'சீ' இணைப்பில் அடங்கியிருந்த விவரங்கள் ஊடகங்களைச் சென்றடைவதற்கான வழிவகைகளை இந்தியா மேற்கொண்டு முடித்துவிட்டிருந்தது.

அவ்விதம் ஊடகங்களுக்கு 'சீ' இணைப்புக் குறித்த விவரங்கள் கிடைத்து அவற்றை ஊடகங்கள் பகிரங்கப்படுத்தியதையடுத்து அதற்கெதிராக தீவிர எதிர்ப்புத் தலைதூக்கநேர்ந்தது. அத்தகைய தீவிர எதிர்ப்புக்கு முகங்கொடுக்க இயலாதநிலையில் ஜே.ஆர். அந்தச் 'சீ' இணைப்புக்கும் தமது அரசுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாதெனத் தெரிவித்து அந்த முயற்சியைக் கைவிட்டுவிட்டார்.

ஆனாலும் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்ட மக்கள் ஐக்கியமுன்னணிக் கட்சி அந்தச் 'சீ' இணைப்புக் குறித்து ஜே.ஆர். மீது குற்றஞ்சுமத்தியது மட்டுமன்றித் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணித்து வெளிநடப்புச் செய்தது. அவ்விதம் தமது எதிர்ப்பைத் தெரிவித்து மக்கள் ஐக்கியமுன்னணிக் கட்சியின் தலைவர் தினேஸ் குணவர்த்தனா மாநாட்டு மண்டபத்தை விட்டு வெளியேறிய சமயம் மாநாட்டுக்குத் தலைமை தாங்கி நடத்திய ஜே.ஆர். உரத்தகுரலில் இவ்விதம் தெரிவித்தார்.

'மண்டபத்தை விட்டு வெளியேற இரண்டு வாயில்கள் உள்ளன. வெளியேறிச் செல்வதற்காக நீங்கள் விரும்பும் எந்தவொரு வாயிலையும் பயன்படுத்திக்கொள்ள இயலும்'. ஆனால், கடைசியில் தினேஸ் குணவர்த்தனா மாநாட்டில் இருந்து வெளியேறிச் செல்லப் பயன்படுத்திய வழியினூடாகவே ஜே.ஆரும் மாநாட்டை விட்டு வெளியேறிச்செல்ல நேரிட்டது. அவ்விதம் ஜே.ஆர் 'சீ' இணைப்பு விவகாரத்திலிருந்து சாதுரியமாகத் தன்னை விடுவித்துக்கொண்டதைக் கண்டு அந்தவேளையில் சினமடைந்தவர்கள் வேறு எவருமல்லர். இலங்கை சமசமாஜக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான கொல்வின் ஆர் டி சில்வாவும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான பீற்றர் கெனமனுமே அவ்விதம் ஜே.ஆரின் குள்ளநரித்தனத்தைக் கண்டு கடுங்கோபமுற்றனர். 'சீ' இணைப்பு விடயத்தில் இணக்கப்பாடொன்று மாநாட்டில் எட்டப்படுமானால், அதில் அரசும் சம்பந்தப்படுகிறதென உறுதியாகிறது எனவும் அரசு அத்தகைய முடிவுக்கு இணங்கியாக வேண்டுமெனவும் அவ்விரு தலைவர்களும் வாதிட்டனர். ஆனாலும், ஜே.ஆரின் அரசு அந்தச் 'சீ' இணைப்பு விவகாரத்தில் தன்னைச் சம்பந்தப்படுத்திக் கொள்ளாது தன்னைக் காப்பாற்றிக்கொண்டது.

### இந்திய அரசின் புதிய திட்டத்தையும் ஜேஆர் கைகழுவிவிட்டார்

ஆனாலும், இந்திய அரசு தனது முயற்சியைக் கைவிடவில்லை. அந்தவகையில், 1986ஆம் ஆண்டில் டிசம்பர் '19 யோசனைகள்' என்ற பெயரில் அதே 'சீ' இணைப்பு மேலும் நேர்சீர் செய்து புதுப்பிக்கப்பட்ட நிலையில் மீண்டும் முன்னிலைப்படுத்தப்பட்டது. அந்தப் புதிய யோசனைகள் திட்டத்தில் புதியதொரு விடயமாக நாட்டின் அரசமைப்பில் உபஜனாதிபதிப் பதவியொன்றை உருவாக்கும் யோசனையும் உள்ளடக்கப்பட்டிருந்தது. அத்துடன், அந்தத் தடவையும் அந்தப் புதிய யோசனைகளுக்கு இலங்கை சமசமாஜக் கட்சியும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் தமது ஆதரவை வெளிப்படுத்தி நின்றன. ஆயினும், ஜே.ஆர். அந்தத் திட்டத்தையும் கைகழுவிவிட்டார்.

அதன் பின்னரும் இந்தச் 'சீ' இணைப்பு இலங்கை இந்திய ஒப்பந்தத்தினூடாக தலைதூக்கமுடிந்தது. வழக்கம்போல் இலங்கை சமசமாஜக்கட்சியும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் அந்தச் 'சீ' இணைப்புக்கு யோசனைக்கு ஆதரவுவழங்கின.

### 'சீ' இணைப்பின் புதிய வடிவமே தீர்வுப்பொதி

இந்திய இலங்கை ஒப்பந்தம் தோல்வியடைந்ததையடுத்து இந்த 'சீ' இணைப்பு 1995 ஆம் ஆண்டின் தீர்வுப்பொதி என்ற புதிய வடிவில் முன்வைக்கப்படநேர்ந்தது. அந்தத் தீர்வுப் பொதித் திட்டத்துக்கு ஆதரவுவழங்குமாறு அந்தவேளையில் எதிர்க்கட்சியாகச் செயற்பட்டு வந்த ஐ.தே.கட்சிக்கு இந்திய அரசு அழுத்தம் அளித்ததிலிருந்து இந்தியா இந்த விடயத்தில் பின்னணியில் செயற்பட்டதென்பது தெளிவாகப் புரிந்தது. அந்தச் சமயத்தில் கூட இலங்கை சமசமாஜக்கட்சியும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் அத் தீர்வுப் பொதிக்குத் தமது ஆதரவைத் தெரிவித்து வந்தன. அண்மையில் மஹிந்தவின் சர்வகட்சி நிபுணர் குழு நாட்டின் இனப் பிரச்சினைத் தீர்வு யோசனைகளைத் தயாரித்த வேளையில், இந்திய அரசு இங்கிருந்து இந்தியாவுக்கு வரவழைத்து இந்திய பஞ்சாயத்து நிர்வாக முறைகுறித்து ஆராய வைப்பித்த பிரமுகர்களில் 1984ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் திகதி முதல் முதலாக வெளிக்கொணரப்பட்ட 'சீ' இணைப்பு வெளியான வேளை முதல் இற்றைவரை இந்தியாவுக்கு ஆதரவு வழங்கி வந்த சமசமாஜ மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகளும் அடங்கியிருந்தனர்.

### இன்று இந்தியா 'ஏ' யோசனைக்கே முக்கியத்துவம் கொடுக்கிறது

1984ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட மூன்று இணைப்புகளிலும் 'ஏ' மற்றும் 'பி' இணைப்புகளை புறம்தள்ளி 'சீ' இணைப்பையே இந்தியா இறுகப்பற்றிக் கொண்டிருந்தது. ஆனால், இந்தத்தடவை சமர்ப்பிக்கப்பட்ட மூன்று யோசனைகளில் 'பி' மற்றும் 'சீ' யோசனைகளைக் கைவிட்டு விட்டு இந்தியா 'ஏ' யோசனையையே பற்றிக் கொண்டுள்ளது.

தமிழில்: ராஜா

### வடக்குக் கிழக்கு இணைப்பே இந்தியாவின் நிலைப்பாடு

**மஹிந்த + ஜே.வி.பி. + ஜாதிக ஹெல உறுமய = ஒற்றையாட்சி**

ஆனால், அன்றைய 'சீ' இணைப்பு யோசனை முதற்தொட்டு, அண்மைய 'ஏ' யோசனைகள் வரையிலுமான இந்தப் பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட யோசனைகளின் வரலாறு முழுவதும் சேலையின் இடையே இழையோடப்பட்டிருக்கும் தங்க நிற நூலிழைகள் போன்று முக்கியத்துவம் பெற்றுத் திகழும் விடயம் வடக்குக் கிழக்கு மாகாணங்களது ஒன்றிணைப்பு என்ற விடயமே யாகும். அதாவது, இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படையாக இந்தியா கருதுவது இந்த வடக்குக் கிழக்கு மாகாணங்களது இணைப்பேயாகும்.

இந்த வடக்குக் கிழக்கு இணைப்பு மேற்கொள்ளப்பட்ட விதம் சட்டப்படி செல்லுபடியற்றதென இலங்கை உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. அதனை மஹிந்தவின் அரசு நாடாளுமன்றத்தில் முன்வைத்து அந்தத் தீர்ப்பை உறுதிப்படுத்தியுள்ளது. வடக்கு கிழக்கு இணைப்பு சட்டப்படி செல்லுபடியற்றதெனத் தீர்ப்பு வழங்குமாறு கோரி ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கடுங்கோட்பாட்டுத் தரப்புகளே உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தன. இந்த நிலையில் 1984ஆம் ஆண்டின் 'சீ' இணைப்பு முன்வைக்கப்பட வேளை முதல் இந்தியாவின் நிலைப்பாட்டுக்குத் தொடர்ந்து ஆதரவு தெரிவித்து வந்த இலங்கை சமசமாஜக் கட்சி மற்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்பவற்றின் பிரதிநிதிகள் இந்தியாவுக்குச் சென்று திரும்பி தமது இந்த 'ஏ' அறிக்கையில் வடக்குக் கிழக்கு ஒன்றிணைந்த நிலையில் நிர்வகிக்கப்பட வேண்டுமென்ற விதியையும் சேர்த்துக் கொண்டதேன்? என்பதனைப் புரிந்துகொள்வதொன்றும் அத்தனை சிரமமானதொரு காரியமல்ல. அன்று இந்தியா அந்தச் 'சீ' இணைப்பைப் பகிரங்கப்படுத்து (5ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



### ஜேசுதாசன் செபரட்ணம்

பிறப்பு 22✱03✱1970 இறப்பு 10✱11✱2006

**10.11.2006 அன்று அகாலமரணம் அடைந்த ஜேசுதாசன் செபரட்ணம்**
வாழ்வில் விளக்கு ஏற்றிய நீயே
உயிராய் வந்து தீயில் எரிந்தாயே
வேதனையில் துடிக்கிறதே
என் உள்ளம்
பாச மலரே பாதகர் பறித்தார்களே
உங்கள் உயிரை- நீர்வரும்
பாதையைக் கண்ணீருடன் பார்த்திருக்கிறேன்
வருவீர்களா? என் துயர்துடைக்க....

(63602)

முத்தநயினார் கோவிலடி,
முதலாம் ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

மாமன்-நேருராசா, மாமி-ரஞ்சினிதேவி, மனைவி-பிரதீபா, பிள்ளைகள்-துஷானி, துவாரகா, துளசிகா, மச்சான்மார்-பிரதீபன், பிரகதீஸ் மற்றும் குடும்பத்தினர்.

## இதயத்தில் இருந்து.......



எமது குடும்பத் தலைவர் அமரர் யோ.பி. அலோசியஸ் அவர்களின் மறைவினையொட்டி விடுக்கும் நன்றிமடல். இவ்வுலகப் பயணவாழ்வில் இறைவன் இவருக்குச் செய்த அனைத்து நன்மைகளுக்கும் நன்றி. அமரரின் மறைவினைக் கேள்வியுற்று உடன் தொடர்பு கொண்டு சகல வழிகளிலும் உறுதுணையாக இருந்து அவரது உடலை இல்லம் கொண்டு வந்து சேர்க்க உதவிய வண.பிதா.றொஷான் அடிகளாருக்கும் (செயலர்), துயரச் செய்திகேட்டு எமது இல்லத்திற்கு வருகை தந்து செபித்த யாழ். மறை மாவட்ட ஆயர், குரு முதல்வர், குருக்கள், அருட்சகோதரிகள், அருட் சகோதரர்கள், குருமட மாணவர்கள், ஏனைய தனியார் நிறுவன ஊழியர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்,பக்தி சபை உறுப்பினர்கள், மலர்வளையம் சாத்தினோர், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்த ;லம் பெயர் உறவுகள் உட்பட அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலிப்பிரசுரம் மூலமும் தந்திமூலமும் கிளி., முல்லை மாவட்டத்திலிருந்து துயரச் செய்தி அனுப்பிய மறைக்கோட்ட முதல்வர்,குருக்கள், துறவிகள் அனைவருக்கும் அனைத்து வழிகளிலும் எமது துயரிற் தோளோடு தோள் கொடுத்த அனைவருக்கும் அனைத்திற்கும் மேலாக எம்மவரின் இறுதித்திருப்பலியைச் சிறப்பாக நிறைவேற்ற அனைத்து வழிகளிலும் ஏற்பாடு செய்த புனித திருமுழுக்கு யோவான் ஆலயப் பங்குத்தந்தை வண.பிதா. சந்திரன் அடிகளாருக்கும் , அமரரோடு தோளோடு தோள் நின்று உழைத்த , செபித்த அனைத்து சக ஊழியர்களுக்கும் எம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியைக் கூறிக்கொள் கின்றோம்.

243, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 3302

(63513)

தாயீ,
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### லயன் சோமேஸ்வரி கைலாசநாதன்

(இணுவில் லயன்ஸ் கழகம், ஓய்வுபெற்ற அதிபர், யா/இராமநாதன் கல்லூரி)



அன்னார் லயன் த. கைலாசநாதனின் அன்பு மனைவி, சி.முருகேசு Cooperative Inspector - கனகம்மா (காலஞ்சென்றவர்கள்) மகள், அமரர்கள் கை.தம்பையா- கனகம்மா- மருமகள், அமரர் மு. சோமசேகரம், மு.விஸ்வநாதன் (ஓமான்) , முசோமகந்தமூர்த்தி (ஜேர்மனி), லண்டன் - வி.ரேணுகாவின் சகோதரி, திருமதி இ.செல்லத்துரை,Dr.ந.கைலாயர், சு. மகாலக்சுமி, த.திருஞானசம்பந்தன், (ஓமான்), திருமதி ந.கலைவாணி(ஆசிரியர், கிளிநொச்சி),ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி சோ.இராஜபூபதி, திருமதி வி.இராஜன், திருமதி சோ.சரோஜினி ஆகியோரின் மைத்துனி, கௌசி- கோபி,நிசாகரன், கரிகரன்-பெரியம்மா. Dr. சுரேஸ், இரமேஸ், Dr.தினேஸ்,Dr.சசிகலா, கல்விநாயகி, நளாயினி செந்தூரன், செந்தீபன், மாதுமை- சின்னம்மா, நிமலன், அருணன், விக்னராஜா, சாந்தினி - நவரஞ்சன், நந்தினி , யாதவன், தர்சினி, கஜன் ஆகியோரின் மாமி. ரிசிகேசன், கோபி, திவிநசன், சதுர்சியா, மகிமா, சரிதா, பத்திரா ஆகியோரின் பாட்டி து. செல்லத்துரை, தாமரை வாசினி கலாதேவி, நடராசா, லண்டன்- விவேகானந்தன், அமரர் செ.சுந்தரராசா ஆகியோர் நெருங்கிய பந்துக்கள் . பல்லாயிரம் மாணவச் செல்வங்களை உருவாக்கியவர். 24.11.2006 இல் இறைவனடி சேர்ந்தார். 31ஆம் நாள் நினைவஞ்சலி இன்று ஞாயிற்றுக் கிழமையாகும்.

அன்னாரின் குடும்பத்தினர் இந்நாளிலே - அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை எல்லா அன்புள்ளங்களுடன் சேர்ந்து இறைஞ்சுகிறார்கள்

முருகோதயம்,
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

(63584)

## பத்தாமாண்டு நினைவஞ்சலி

மண் மகிழ 09 ✱ 09 ✱ 1923



கண் நெகிழ 24 ✱ 12 ✱ 1996

### அமரர் அந்தோனிப்பிள்ளை மரியாம்பிள்ளை

அன்பிற்கு இலக்கணமாய்
பண்பிற்கு சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
பழகுவதற்கு நல் மனிதராய்
அறிவிற்குத் தந்தையாய்
வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே!
எம்மைப் பிரிந்து ஆண்டு பத்தானாலும்
ஓராயிரமானாலும்
எம் ஆயுள் உள்ளவரை
உம் நினைவு எங்களுடன்...

(சி/51610)

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல.225, தும்பளை வீதி,
தும்பளை, பருத்தித்துறை.


## தூரிகை நுண்கலை வளாகம்

ம.ம.வி. வீதி, நெல்லியடி.

### மகளிருக்கான புதிய பயிற்சி வகுப்புகள்

✱ உடையமைத்தல் Hair style, Make-up, Cake Icing, Painting, சாறி பிளவுஸ், சாறி - சல்வார் வேக்கிங்.

இன்னும் பல குறுங்கால பயிற்சிகள் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் வழங்கப்படுகின்றன....
- இயக்குநர்.

(63528)

## விற்பனைக்கு

டைகர் ஜெனரேட்டர்(950 DC), Water Cooler Fan, ஸ்டெபிலைசர்கள், Sony 21" T.V. , Passion Hero Honda, டொபர்மன் பின்சர் ஆண் நாய் 8 மாதம், பெண் 2 வருடம், இரும்பு வலைக்கூடு, Panasonic Cassette Player மராக்கிகள், Weight Lifting Oiscs என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:
ஷென்மென் அக்குபன்சர் வைத்தியசாலை,
5/1, பிள்ளையார் விதி,
தபால்பெட்டி சந்தி,
பலாலி வீதி,
திருநெல்வேலி.


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சங்கத்தின் நலனுக்காக அரும்பாடுபட்டு உழைத்த கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்

### கந்தையா ஸ்ரீபதி

அவர்கள் திடீரென மறைந்து இன்று 31 நாள்கள் ஆகின்றன. 31ஆம் நாளாகிய இன்று எமது நினைவஞ்சலிகளைக் காணிக்கையாகச் செலுத்துவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்,
பன்னாலை.

(63545)

## துயர்பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆசிரியை

### செல்வி மு.சிவராணியின்

அன்புத் தந்தை

### வல்லிபுரம் முருகுப்பிள்ளை

அவர்கள் இறைபதம் அடைந்த செய்திகேட்டு துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயரடைந்து இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர், ஊழியர் நலன்புரிக்கழகம்.
யா/உடுப்பிட்டி அமி. கல்லூரி,
வல்வெட்டித்துறை.

(சி/51633)

## கண்ணீர் அஞ்சலி

நெடுந்தீவுப் பிரதேச சபையின் நூலகராகக் கடமையாற்றும்

### வில்வராசா பிரபாகர்

அவர்களின் அன்புத் தந்தை

### பொன்னுத்துரை வில்வராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
நெடுந்தீவுப் பிரதேசசபை.

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆசிரியர்
செ.ஜெயமோகனின் தந்தை

### சங்கரப்பிள்ளை செல்லையா

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயரமடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய ஊழியர் நலன்புரிக் கழகம்,
யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி,
வல்வெட்டித்துறை.

### நத்தார் விழா

யாழ். பகவான் ஸ்ரீ சத்தியசாயி நிலையத்தில் நத்தார் விழா நாளை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது. விழாவில் நத்தார் கீதங்கள், சொற்பொழிவுகள், சிறுவர் நிகழ்வுகள் என்பன இடம் பெறவுள்ளன.


## வீடு வாடகைக்கு

திருநெல்வேலியில் நவீன வசதிகள் உடைய (Attached Bathroom) வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:
இல. 4¼, பலாலி வீதி
(கரியபுலம் வைரவர் பின்னால்),
திருநெல்வேலி.


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 24.11.2006 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் வைத்திலிங்கம் நல்லையா

(ஈஸ்வரன் ஸ்ரோர், ஈஸ்வரன் மில், ஈஸ்வரன் பேக்கரி உரிமையாளர்)

அவர்களுடைய வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (24.12.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஈஞ்சடி,
சுதுமலை.

(63519)

தகவல்:
குடும்பத்தினர்.

## எட்டாம் ஆண்டு நினைவு



### அமரர் நாகமுத்து சின்னத்துரை J.P.

(முன்னாள் உடுவில் கி.ச. உப தலைவர்)

தோற்றம் 28✱02✱1927
மறைவு 24✱12✱1998

எட்டு ஆண்டுகள் சென்றதய்யா
மாறவில்லை உம் திருவதனம்
தேடி நித்தம் ஏங்குகின்றோம்
காணவில்லை உம் திருவுருவம்
கூடியிருந்து அரவணைத்து இன்று
எம்மைவிட்டுச் சென்றதேனோ?

பிரிவால் துயருறும்:
மருமகன் - பாக்கியநாதன்,
மகள்- பவளமலர்,
பேரப்பிள்ளைகள் - பிரியா, தீபா, சிந்து, சரண்யா.

ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம், உடுவில்.

(63608)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சிவசம்பு நடராசா

(ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியும் ஓய்வுபெற்ற இலங்கை சிமெந்து கூட்டுத்தாபன பாதுகாப்பு உத்தியோகத்தரும்)

கடந்த 24.11.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (24.12.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,சுன்னாகம்.

(58170)

- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சேனாதிராசா பஞ்சலிங்கம்



புத்தூர் மேற்கு, சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராசா பஞ்சலிங்கம் (முன்னாள் ஹோமியோபதி டாக்டரும், சவூதி அரே பியா, குகன் ஸ்ரோர்ஸ்) அவர்கள் 22.12.2006 வெள்ளி அதிகாலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராசா - பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வித்துவான் சிவபாதசுந்தரம் (சுழிபுரம்) - பார்வதி அம்மாவின் அன்பு மருமகனும் ஜெகநாதன்- சோதிப்பிள்ளையின் மருமகனும் விஜயலட்சுமியின் அன்புக் கணவரும் இராஜஇராஜன் (லண்டன்), இராசமோகன் (நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வித்தியானந்தனின் அன்புச் சகோதரனும் சரஸ்வதியின் மைத்துனரும் இராமலிங்கம் (உரிமையாளர் - ஐங்கரன் ஸ்ரோர்ஸ், அனுராதபுரம்) காசிநாதன் (மட்டுவில்) ஆகியோரின் பெறாமகனும் கேதீஸ்குமரன் -டோசி, காலஞ்சென்ற கிசோக்குமார், மதனகுமார் (லண்டன்) ஆகியோரின் சிறிய தகப்பனும் டெபோறாவின்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.12.2006 வெள்ளி பிற்பகல் 3 மணிக்கு இந்துசிட்டி குடும்பமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புத்தூர் மேற்கு
சிவன்கோயிலடி,
புத்தூர்.

(63547)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உரும்பிராயில் முரளி நினைவு அஞ்சலி

யாழ்ப்பாணம், டிசெ.24

இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரகாவியமாகிய விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பின் முன்னாள் பொறுப்பாளர் மேஜர்முரளி உள்ளிட்ட பத்து வேங்கைகளின் 19 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு உரும்பிராயில் அமைந்துள்ள அவர்களது நினைவுத்தூபியில் நேற்று காலை 8 மணியளவில் இடம்பெற்றது.

யாழ். மாணவர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட இந் நிகழ்வில் பத்து வேங்கைகளின் நினைவுக் கற்களுக் கும் மலர் மாலை அணிவிக்கப்பட்டு ஈகச்சுடர்களும் ஏற்றிவைக்கப்பட்டன. இந் நிகழ்வில் அப்பிரதேச பொது மக்களும் கலந்துகொண்டு மலரஞ்சலி செய்து தமது வணக்கத்தை தெரிவித்துக் கொண்டனர்.

அந்தப் பகுதியில் படையினரின் பிரசன்னமும் காணப்பட்டது. (1)

## திருவெம்பாவை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.24

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய திருவெம்பாவை உற்சவம் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி வரை தினமும் காலை 6.30 மணிக்கு திருவம்பாவை ஓதல் இடம்பெற்றுத் தொடர்ந்து விசேட பூசை நடைபெறும். (1-202)

* * *

யாழ்ப்பாணம், டிசெ.13

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய திருவெம்பாவை உற்சவம் நாளை திங்கட்கிழமை அதிகாலை ஆரம்பமாகவுள்ளது.

அதிகாலை 5.15 மணிக்கு கும்பபூசையுடன் ஆரம்பிக்கும் உற்சவத்தில் தினமும் காலை 6.30 மணிக்கு சுவாமி வீதியுலாவும் திருவாதவூரடிகள் புராணப் படிப்பும் இடம்பெறும். (1-202)

## இலவச வைத்தியசேவை

வடமராட்சி,டிசெ.24

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று இலவச பொது மருத்துவ சேவையும் சிக்குன்குனியாவிற்கான விசேட மருத்துவ சேவையும் வடமராட்சிப் பிரதேசத்தில் நடைபெறவுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி முதல் நண்பகல் 12மணிவரை வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரியிலும் பிற்பகல் 2மணிமுதல் 4மணிவரை அல்வாய் வடக்கு நக்கீரன் சனசமூக நிலையத்திலும் இந்தச் சேவை இடம்பெறவுள்ளது. (1-202)

## அரியாலையில் இன்று 'சிக்குன்குனியா' முகாம்

அரியாலை,டிசெ.24

யாழ். லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் 'சிக்குன்குனியா' மருத்துவமுகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை அரியாலை சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இம் முகாமில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு இலவசமாக மருந்துகளும் வழங்கப்படவுள்ளன. (1-203)

# புலமைப் பரிசில் பரீட்சை சில பாடசாலைகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம், டிசெ.24

குடாநாட்டில் நடத்தப்பட்ட விசேட ஐந்தாம் தர புலமைப் பரீட்சை முடிவுகள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இதுவரை கிடைத்த சில முடிவுகள் வருமாறு:-

**இருபாலை சி.சி.வித்தி**

ஆ.அபிநயா(141), இ.பிரணவன்(137)

**கல்வியங்காடு இ.த.க. பாடசாலை**

ஸ்கந்தா அபிஷேக் (134), கயிலநாதர் தானியேல்(148), யோகராசா சகானன் (153), வினோதன் சுஜீவன்(135), ரகுராஜன் ரேவதி (134), கனகசபை வைஷ்ணவி (152).

**கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி**

ம.யட்சன்(157), கு.சுதர்சினி(151), லோ.தர்சிகா(148), பா.மஞ்சுதன்(146), பி.நிதர்சன் (140), தி.கௌசிகா(136), த.தர்ஷாலினி (136)

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

த.நிசாயா(157), சி.நவநீதா(156), ப.சர்மிலா(149), ரா.நிரோஜன்(146), க.தனுஷியா(146), இ.கீர்த்திகா (144), ரா.சஸ்மிதா(144), க.துவாரகா(142)

**உடுவில் மகளிர் கல்லூரி**

சி.தனுஜா(170), ஏ.எச்.எஸ்.பி.நிதுசன் (168), ஆர்.அர்ச்சுலன்(167), ஆர்.கிசோ (165), எஸ்.விருத்திகா(164), ஆர்.ஆன்.ஜெஸ்மியா(162), எஸ்.பிரணவி (162), பி.ஜெருசா (161), எஸ்.கஜன் (160), பி.எஸ்.தேனுகானன்(158), ஏ.சீலன்(157), எஸ்.ஆரமுதன்(154), எஸ்.கீர்த்திகா(154), என்.கஜந்திகா(153), எம்.குகாயினி(153), எஸ்.வைஸ்ணவி (150), எஸ்.அபிராமி (149), எம்.கமசாந்தி (147), ஜே.தர்சன் (146), இ.துஜிரகன்(145), ஆர். நிசானா (140),தே.துளசி(140), எஸ்.பவப்பிரியா (139), ஜோ.ஸ்ரெலா றொசானி(138), எஸ்.துஸ்யந்தன(136), ம.டியோணி(134), வி.அஜந்தன்(133), ம.மகீஷா (133)-

**சங்கானை சிவப்பிரகாச ம.வி.**

ச.லக்சன்(149), ஜெ.துவாரகன்(140), க.பிரசாந் (140), ர.மேருஜா(139), செ.வேல்வாசன்(136), ச.டிக்ஸன்(136), த.சோபி தன்(136)-

**பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.**

பி.பிரசாந்(140),சி.சிந்துஜன்(141), ர.விஸ்வநாத்(140),ஞா.யசோதரன்(135), கு.அபிராமி(133).


**யா/ மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தி**

சி.குமரேசன்(158), க.மகிந்தன்(157), ர.ராமகிருஸ்ணன்(152), இ.கோகிலன்(152), ஜெ.யதுர்சன்(147), ஜெ.அருண்யா (146), ரா.கோகிலவதனா (145), த.திசாந்தன்(142), நி.கிருஷா (142), தே.தவக்குமார் (139), நா.நிமல்ராஜ்(137), ச.எழிலினி (137), லோ.சஞ்சிகா (135), கி. ஹரிராம் (134).

**புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி**

நி.வரலஷ்மி(134), த.நிஜந்தன்(141), தே.கம்சிகா(135), தி.நிரஞ்சனி(134), ப.பாலகிருஷ்ணா (133)

# சுனாமி அவலங்களை சித்திரிக்கும் சிற்பம்



இலங்கையின் கரையோரப் பகுதிகளில் ஆழிப்பேரலை ஏற்படுத்திய பேரழிவின் அவலங்களைச் சித்திரிக்கும் வகையில் கலாபூஷனம் ஏ.வி.ஆனந்தன் தனியொரு மரத்தில் கலைப் படைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளார்.

''சுனாமி அவலங்களின் சிற்பம்'' என்னும் இக் கலைப் படைப்பின் திரை நீக்கம், ஆழிப்பேரலை அனர்த்தத்தின் நினைவு தினமான நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தெல்லிப்பழை துர்க்காபுரத்தில் உள்ள சிற்பாலயக் கலைக்கூடத்தில் நடைபெறவுள்ளது.

## பொ.ஐ.முன்னணி கூட்டணியில்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு முன்னர் ஜே. ஆரை இந்தியா வில் வைத்து கலந்து பேசிக்கொண்டமை போன்று, இன்று சர்வகட்சி நிபுணர்கள் குழுவின் 'ஏ' அறிக்கை விவரங்கள் பகிரங்கப்படுத்தப்படுவதற்கு முன்னர். இந்திய அரசு தனது நாட்டில் வைத்தே இலங்கை ஜனாதிபதி மஹிந்தவைக் கலந்து பேசியிருந்துள்ளது.

இந்திய அரசு தனது 'சீ' இணைப்பு யோசனையை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துமாறு ஜே.ஆரை வற்புறுத்தியமை போன்றே, மஹிந்த ராஜபக்ஷவிடமும் 'ஏ' அறிக்கையை ஏற்று நடைமுறைப்படுத்த இந்திய அரசு அழுத்தம் பிரயோகித்திருக்குமா? என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ள இயலவில்லை.

**மஹிந்தவுக்கு இந்திய அரசின் ஆலோசனை**

ஆனால், மஹிந்தவின் அண்மைய இந்திய விஜயத்தின்போது நாட்டின் வடக்குக் கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைக்கும் விடயம் குறித்து இந்திய அரசு மஹிந்தவிடம் பேசியிருக்கும் என்பதில் எதுவித சந்தேகமும் கிடையாது. வடக்கையும் கிழக்கையும் ஒன்றிணைப்பது இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தமொன்றாகுமெனவும், அத்தகைய ஒப்பந்தத்தை தனித்தரப்பாக மேற்கொள்ளப்பட இயலாதெனவும் இந்திய அரசு மஹிந்த ராஜபக்ஷவுக்கு எடுத்து விளக்கியிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

**மஹிந்த அரசு கைவிரித்துவிட்டது**

அந்தச் சந்தர்ப்பத்தில் மஹிந்த இந்திய அரசு வழங்கிய ஆலோசனைகளைக் கேட்டுத் தலையாட்டிக்கொண்டிருந்துவிட்டு இலங்கைக்குத் திரும்பிவந்ததன் பின்னரே அந்த 'ஏ' அறிக்கை விவரங்கள் 'த ஹிந்து' பத்திரிகையின் இணை யத்தளமூடாக பகிரங்கப்படுத்தப்பட்டது. உண்மையில் 'ஏ' அறிக்கை விவரங்கள் அவ்விதம் வெளிவரும்வரை மஹிந்த அதுகுறித்து எதுவும் அறிந்திருக்கவில்லை. அந்த அறிக்கையின் விவரங்கள் மஹிந்தவின் கைகளுக்குக் கிட்டுவதற்கு முன்னர் 'த ஹிந்து' பத்திரிகைக்கு எவ்விதம் போய்ச் சேர்ந்தது என்பது பிரச்சினையைத் தோற்றுவிக்கும் ஒருவிடயமாக அமைந்துவிட்டது.

அந்தவகையில், சம்பவங்களைக் கோர்த்துப்பார்க்கும்போது, 1984 ஆம் ஆண்டில் அன்று அந்த 'சீ' இணைப்பு குறித்த விவரங்கள் வெளியான விதத்திலேயே அண்மையில் இந்த 'ஏ' அறிக்கை விவரங்களும் வெளிவந்ததென்பதை ஊகிக்கமுடிகிறது. ஆயினும், இந்த 'ஏ' அறிக்கை விவரங்கள் வெளிவந்த கையுடன் அதற்கு எதிராகக் கிளம்பிய கடும் விமர்சனங்களுக்கு மத்தியில் அரசுக்கும் இந்த 'ஏ' அறிக்கைக்கும் எதுவித சம்பந்தமும் கிடையாது என மஹிந்தவின் அரசு உத்தியோகபூர்வமாக அறிக்கை வெளியிட்டு முந்திக்கொண்டது.

**'ஏ' அறிக்கையின் பிறப்பு முறைதவறிப் பிறந்த குழந்தையின் பிறப்பை ஒத்ததே**

அந்தவகையில், அன்றைய 'சீ' இணைப் புப் போன்றே இன்றைய 'ஏ' அறிக்கை யும் முறை தவறிப் பிறந்த குழந்தையின் ஜனனத்தை ஒத்த தொன்றே.

இந்தநிலையில் இன்று இந்த 'ஏ' அறிக்கையின் பிறப்பின் மர்மத்தை -அடிமுடிதேடிக் கண்டுபிடிக்கப் பலர் புறப்பட்டுள்ளனர்.

அன்றைய 'சீ' இணைப்பின் தோற்றம் குறித்து இந்தியா பொறுப்பேற்காதது போன்றே இன்றைய 'ஏ' அறிக்கையின் தோற்றம் குறித்தும் இந்தியா பொறுப்பேற்க முன்வராதபோதிலும் இந்தியா போட்ட எண்கணித சூத்திரம் குறித்துப் பலருக்கும் தெளிவான உண்மை புலப்பட்டுள்ளது.

'ஏ' அறிக்கை விவரங்கள் வெளியான கையுடனேயே ரணில் அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். அமெரிக்கா சென்றடைந்த கையுடனேயே ரணில் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் இலங்கைக்கான நடவடிக்கைகளைக் கையாளும் பௌச்சரைச் சந்தித்துள்ளார். அதனையடுத்து பௌச்சரும் ரணிலும் இணைந்து அமெரிக்காவில் இருந்தவாறே இந்திய வெளிவிவகார அமைச்சரையும் நோர்வே நாட்டின் அமைச்சர் சொல்ஹெய்மையும் தொடர்புகொண்டு கருத்துப்பரிமாற்றங்கள் மேற்கொண்டனர்.

**இந்தியா சிக்கலை விடுவிக்கத் தவறுமாயின், மஹிந்தவுக்கே ஆபத்து**

அந்தவகையில் எண்கணித சூத்திரம் தற்போது கீழ்க்காணும் வகையில் அமையக் கூடும். ரணில்+பௌச்சர்+சொல்ஹெய்ம்+ நாராயணன்+? =சமஷ்டிமுறை ஆட்சி

இந்தச் சூத்திரத்தில் நிரப்பப்படாத வெற்றிடத்தை நிரப்பவேண்டிய பிரமுகர் மஹிந்தவே ஆகிறார். மேற்குறித்த சூத்திரத்தில் வெற்றிடத்தை மஹிந்தவின் பெயரால் பூர்த்திசெய்ய இயலாதிருப்பதற்கான காரணம், பொ.ஐ.முன்னணி கூட்டணி சூத்திரத்தில் மஹிந்த சிக்கிக் கொண்டிருப்பதே ஆகும்.

மஹிந்த+ஜே.வி. பி+ஜாதிக ஹெல உறுமய = ஒற்றையாட்சிமுறை.

மஹிந்த மேற் குறிப்பிட்ட பொ.ஐ. முன்னணி கூட்டணியின் சூத்திரத்தில் சிக்குண்டிருக்கும் வரை, இந்திய அர சின் எண்கணித சூத்திரத்தால் உரிய பல னேதும் கிட்டிடப் போவதில்லை.

ஆனால், ஒன்று மட்டும் தெளிவாகத் தோன்றுகிறது. இந்தியாவின் எண்கணித சூத்திரம் சிக்கலை விடுவிக்கத் தவறுமானால், மஹிந்த கூடிய விரைவில் பெரும் சிரமநிலையொன்றுக்கு முகம் கொடுக்க நேருமென சாதக பலன் கூறியது [illegible] யதார்த்தமான [illegible]

## திருவம்பாவை ஒலிபரப்புக்கு உதவக் கோரிக்கை

திருவெம்பாவை நிகழ்ச்சிகளை பொருத்தமான கோயில் ஒன்றிலிருந்து கட்டணமின்றி ஒலிபரப்பவும், ஒளி பரப்பவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கும் ரூபாவாஹினி கூட்டுத்தாபனத்துக்கும் உத்தரவிடுமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் இலங்கை ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

பக்தர்கள் விடியற்காலையிலே கோயில்களுக்குச் செல்வார்கள் என்றும், சில பகுதிகளில் திருவெம்பாவை பாடியபடி பக்தர்கள் வீதிகளில் உலா வருவார்கள் என்றும் தெரிவித்துள்ள இந்து மாமன்றம் இவ்வாறான நிகழ்வுகள் இடையூறின்றி இடம்பெறுவதற்கு ராணுவத்தினரை உதவும்படி அறிவுறுத்த இந்து மாமன்றம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

**கலாசார மண்டபம் அடுத்த மாதம் திறப்பு**

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் சாவகச்சேரி சிவன் கோயில் பகுதியில் 11மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கலாசார மண்டபம் அடுத்த மாதம் திறக்கப்பட்டு பொது மக்களின் பாவனைக்கு விடப்படவுள்ளது.

மண்டப நிர்மாண வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாக திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக் [illegible]


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/யாழ் .இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன்**

செல்வன்

**நாகரத்தினேஸ்வரன் சிந்துஜன்**



தரம் ஐந்து 2006 புலமைப் பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளைப் பெற்று பாடசாலைத் தரத்தில் 12 ஆம் இடத்தினைப் பெற்றுள்ளார். அவருக்கு ஊக்கமளித்து, வழிப்படுத்தி நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கரம்பைக் குறிச்சி, வரணி.

அம்மா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா ஆசை மாமா, பெரிய மாமா குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/ யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி கற்கும்**

**செல்வன் சிவானந்தன் கிருசன்**



இவ்வருடம் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 145 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையை இட்டுப் பாராட்டுவதோடு ஏனைய பரீட்சைகளிலும் சித்தியடைந்து உயர்நிலையை அடைய வாழ்த்துகின்றோம்.

பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானை.

லோகநாதன் குடும்பம்.

## முதலாவது பிறந்தநாள்



பிரான்ஸில் வசிக்கும்

திரு.திருமதி வினோதன் அருட்செல்வி தம்பதியரின் அருந்தவப் புதல்வன்

**சார்ஜிஷன்**

தனது முதலாவது பிறந்தநாளை பிரான்ஸில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். அவரை பிரான்ஸில் வசிக்கும் அப்பா வினோதன், அம்மா அருட்செல்வி,சித்தப்பா விசோந்தன், மாமா சிவகாசன் மற்றும் அம்மப்பா துரைராசா குடும்பத்தினர், அன்ரி குடும்பத்தினரும் சுவிஸில் வசிக்கும் அப்பப்பா அருள்நந்தன் குடும்பத்தினரும் இலங்கையில் வசிக்கும் அப்பப்பா விருந்தம் அப்பம்மா சாரதாகுட்டி, சித்தப்பா விஜிதன், சித்தி கலைச்செல்வி மற்றும் பூட்டன்மார், பூட்டிமார், சித்தப்பாமார் அபி, அருண், சித்திமார், பேரன்மார், பேர்த்திமார், அத்தைமார், அண்ணன்மார், மாமா திலீபன் ஆகியோர் சார்ஜிஷனை சகல கலைகளும் கற்று கரணவாய் மூத்தவிநாயகர் அருள்வேண்டி பல்லாண்டு காலமும் நீடூழி வாழ்கவென வாழ்த்து கின்றோம்.

சாரதா பவனம்,
காவில் வயல்.
கரணவாய், கரவெட்டி.

K.P.விருந்தம்
(அப்பப்பா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாக்யா இசைப்பயிலகம்

மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
இசை, இசை வாத்திய வகுப்புகளுடன் ஓவியப் பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன.

* வயலின்
* மிருதங்கம்
* சித்திரக்கலை
* புல்லாங்குழல்
* ஓகன்
* வாய்ப்பாட்டும் பண்ணிசையும்

(63619)

**பாக்யா காகிதாதிகள்**
121, கே.கே.எஸ்.றோட், கொக்குவில்.


## 6ஆம் ஆண்டு நினைவலைகள்

### இளையவி செல்வராஜா



(காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

தோற்றம் 02 - 08 -1955 மறைவு 29- 12 - 2000

திதி: சதுர்த்தசி
24.12.2006

எம்மைப் பிரிந்து ஆறு ஆண்டுகள்
சென்றாலும்
உங்கள் நினைவலைகள் என்றென்றும்
எம்மை விட்டு பிரியாது
ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய். (63538)

- குடும்பத்தினர்.


# IELTS

Essential course for migration and higher studies in Australia,UK, New zealand & Canada



நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் இங்கு பயிற்சி பெற்று நல்ல பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். British Council இன் அங்கீகாரம் பெற்ற நிறுவனம். முற்றிலும் புதிய நூல்கள் வேண்டிய நேரம் Listening Practice செய்ய வசதிகள் பேச்சுப் பயிற்சி போன்ற சகல பாடநெறிகளும் British Council Colombo இன் நடைமுறை போன்றே. வகுப்புக்கள் திங்கள் தொடக்கம் வியாழன் வரை பகல் 12.00 - 2.00 வரை Step Upto IELTS Programme. சனி, ஞாயிறு நாட்களில் 8.00 - 11.00 மணி வரை Advanced Exam Level Programme.

**புதிய வகுப்புக்கள் 05.01.2007 இல் ஆரம்பமாகின்றன.**

**BRITISH COLLEGE OF ENGLISH**
141,Adiyapatham Road, Thirunelvely.


## மணமகள் தேவை

1971ஆம் ஆண்டு, கேட்டை நட்சத்திரம், கிரகபாவம் 5, விரைவில் இத்தாலி செல்லவிருக்கும் மணமகனிற்குப் பொருத்தமான, அழகிய மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு:- விளம்பர இலக்கம் **2940**
(59682)

## கொழும்பு, யாழ். - யாழ்., கொழும்பு விமான சேவை

தொடர்பு: 078 6059885
0777 733662
021 222 3143
021 222 2874
(56908)

## மணமகள் தேவை

ஆஸ்திரேலிய நிரந்தர வதிவுரிமையுடைய, வயது 30, உயரம் 5' 9'', B.Com. (Special) பட்டதாரி, கணக்காளர் மகனுக்கு தாயார் 27 வயதுக்குட்பட்ட பெண்ணைத் தேடுகின்றார்.
(சி/51499) தொடர்பு:-
T.P.: 0112362252
E-mail: proposalan@yahoo.com

## சிறு விமான சேவை

**யாழ். - கொழும்பு விமான சேவைகள்**
தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது. உடனடிப் பயணம்.
தொடர்பு:- தொ.பே.: 0112721789, 0114964994, 0785788811, 0785325501.
(சி/50463)

## விற்பனைக்கு

எம்மிடம் DVX-100 PANASONIC (3CCD) வீடியோ கமரா மற்றும் வீடியோ மிக்ஸிங் செய்யக்கூடிய முறையில் CANOPUS DV STORM-2 காட் பொருத்திய கணனி மற்றும் பல புகைப்படத் தொழில்சார் பொருள்களும் (புதிதாகவும், பாவிக்கப்பட்ட நிலையிலும்) விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் நேரில் தொடர்புகொள்ளவும்.
(63525) தொடர்பு: **செல்லா வீடியோ**
3ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 08.12.1979 இல் பிறந்த, நட்சத்திரம் பூசம், கிழக்கு பல்கலைக் கழகத்தில் கணனி பிரயோக உதவியாளராகக் கடமை புரியும் மணமகனுக்கு தொழில்புரியும் அழகான மணமகள் தேவை. சீதனம், காணி, வீடு எதிர்பார்க்கப்படும். தொடர்பு: **சி.தர்மராஜன்,**
கோயில் வீதி, கிழக்கு கொக்குவில். (63696)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ பட்டதாரி வயது 35, செவ்வாய் தோஷம் அற்ற, சுவாதி, கிரக பாவம் 32 கொண்ட பெண்ணுக்குத் தகுதியான மணமகனைத் தேடுகின்றார்கள். சீதனம் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: **0776673078**
**திரு.இ.சற்குணநாதன்**
விஸ்வகுல ஒழுங்கை,
புலோலி வடக்கு, பருத்தித்துறை.
(63605)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நாவாந்துறையைச் சேர்ந்த
ஜோண்சன் லொயலா தம்பதியரின் புதல்வன்
**செல்வன் எல்மார்**
**(யாழ். புனித யோண் பொஸ்கோ வித்தியாலயம்)**

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2006 இல் 166 புள்ளிகள் பெற்று மாவட்ட மட்டத்தில் 24ஆவது இடத்தையும் பாடசாலையில் 3ஆம் இடத்தையும் பெற்ற இவரை வாழ்த்தி பாராட்டுவதோடு, இவர் கல்விகற்ற பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர் ஏனைய ஆசிரியர்கள், அன்பொளி இயக்குநர், கற்கமி இயக்குநர் அனைவருக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
(63539) - பெற்றோர்.

## உளம் நிறைந்த வாழ்த்துக்கள்



2006 ஆம் ஆண்டு நடைபெற்ற
5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்த அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கைச் சேர்ந்த
தவராசா இராசசெல்வி தம்பதியரின்
செல்வப் புதல்வி **துளசி**
(மாணவி, உடுவில் மகளிர் கல்லூரி)
அவர்களை மனதாரப் பாராட்டி
வாழ்த்துகிறோம்.
(63531) - உறவினர்கள்.

## விற்பனைக்கு

பெரிய வேம்பு மரத்தில் அரிந்த கதவுகளுக்குரிய சட்டகனம், அடைப்புக்கனம் பலகைகளும் நிலை, யன்னல்களுக்குரிய 4/3 சைஸ் தடிகளும் 8 'இஞ்சி'யிலிருந்து 4 'இஞ்சி'வரையும் வேம்பு 10 'இஞ்சி', 11 'இஞ்சி' யன்னல் சட்டத்துக்குரிய பலகைகள் சதுரஅடிக்கணக்கில் மொத்தமாகவும் கோயில் தேவைகளுக்குரிய மாவிலங்கை பலகைகளும் 3இஞ்சி, 2½ இஞ்சி கண்டங்களும் ஊர் மகோகனி பலகைகளும் 4 அடிகளுக்கு உட்பட்டது. தேர்ச்சிலுக்குரிய வாகை மரமும் பலகையும் 3/2, 2/2, 4/2, 2½/2½ அளவிலான தடிகளும் விற்பனைக்குண்டு.

வாங்க விரும்புபவர்கள் தொடர்பு:
(63529) **செ.கதிர்காமலிங்கம்**
அ.மி.பாடசாலை வீதி, வல்வெட்டித்துறை.

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் ரி.என்.ராஜா அவர்களின் அன்புத் தந்தை

**தம்பிப்பிள்ளை நடராசா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு அலுவலகம்,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(63522)

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் ஏனைய கூட்டுறவு அலுவலக உத்தியோகத்தர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### கனகலிங்கம் சர்மிளா



தோற்றம் 26 - 08 -1983 மறைவு 24 - 11 - 2006

தெய்வமே!
ஏன் எங்கள் அன்புச் செல்வத்தை
எம்மிடமிருந்து பறித்துக்கொண்டாய்?
என்ன தவறு செய்தோம்?
என்ன குறை கண்டாய்?
ஆறாதே மனம் தேறாதே!

ஊரெழு வடக்கு,
சுன்னாகம்.

பிரிவால் வாடும்:
தந்தை, தாய்,
சகோதரர்கள். (63555)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 08 ★ 04 ★ 1968

மறைவு 11 ★ 11 ★ 2006

கடந்த 11.11.2006 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் அழகர்சாமி சரவணகுமார்
### (சரவணா)

பாலைவனத்தில் பூக்கள் மலர்ந்திடலாம்
எம் முகத்தில் எனி மலர்ச்சியுண்டோ...?
சூரியன் திசை மாறி மறையலாம்...
தங்கள் நினைவலைகள் எம்மைவிட்டு மறையுமா?
தெய்வத்துக்கு கண்ணும் இல்லை தேம்பி அழ தெம்பும் இல்லை!
தேடிக் கிடைக்காத செல்வமடா - சரவணா
தீயிலும் தீயாத தங்கமடா! இன்னும் ஒரு பிறவியிருந்தால்
யுத்தம் இல்லாத தேசம் ஒன்றில் மீண்டும் மலர்வாயா? சரவணா
செல்வங்கள் யாம் நினைத்து நினைத்து கதறியழ எங்கனம் சரவணா...
எம்மைவிட்டு சென்றீர்...?
தங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (24.12.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல.37, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம். (59675)

குடும்பத்தினர்.

## ஜெகோவாவின் விசேட மாநாடு

யெகோவாவின் சாட்சிகளுடைய ஒரு நாள் விசேட மாநாடு இன்று மு.ப.9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 'கடவுளுடைய வார்த்தையை அறிவிப்பதில் அதிக ஆர்வம் காட்டுங்கள்' என்னும் தலைப்பில் இம்மாநாடு நடைபெறவுள்ளது.(1-202)


## Jaffna College Institute of Technology

Vaddukoddai, Jaffna, Sri Lanka

**The following computer Certificate Courses will commence on 08 January 2007**

**MS OFFICE**
**O/L பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான விசேட கற்கை நெறிகள்**
* MS Word * MS Access * MS Excel * PowerPoint
Duration: 2½ -3 months - Fee: 2,500/-

**Printing Technology**
* PageMaker * Photoshop * CorelDraw
Duration: 4 months - Fee: 3,000/-

**Hardware** Duration: 3 months - Fee: 2,000/-
**Macromedia Flash** Duration: 3 months - Fee: 2,000/-
**Maya**
Advantages: Advertisement creations, computer Games, 2 D background Creations, Miracle Animation, 3D Modelling Objects
Duration: 3 months - Fee: 4,000/-

FOR APPLICATION FOR MS AND DETAILS CONTACT
**Director**
**Jaffna College Institute of Technology,**
**Vaddukoddai.**
(C/51624)
T.Phone: 0602213139 or 021 222 8275 E-mail: jcit@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

# குடாநாட்டின் பேராபத்து இப்போது 'சிக்குன் குனியா'

பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பது முதுமொழி. அது மெத்தவும் சரி என்பதனை எடுத்துக்காட்டுவது போன்று, குடாநாட்டு மக்களை ஒன்றுக்குப்பின் மற்றதாக, பலதரப்பட்ட அவலங்களும் கஷ்டங்களும் ஒரேயடியாக வந்து வாட்டி வதைக்கின்றன.

கடந்த நான்கரை மாதங்களாக அவர்களின் அடிப்படை வாழ்வாதாரங்கள் பல வழிகளாலும் செயற்கையாகவும் இயற்கையாகவும் தவிடுபொடியாக்கப்பட்டு வருகின்றன.

இரண்டு வாரங்களுக்குப் போதுமான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களே கையிருப்பில் இருந்தவேளை, திடீரென - மின்னாமல், முழங்காமல் - எவ்வித முன்னறிவித்தலோ, அசுகையோ இல்லாமல் ஒகஸ்ட் 11ஆம் திகதி ஏ-9 வீதி மூடப்பட்டது.

அதன் விளைவு -

ஊரடங்கு உட்பட்ட இறுக்கமான புறச்சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்ட நிலையில், குடாநாட்டு மக்கள் அவதிப்படநேர்ந்தது. அதன்பின்னர் சகல வழிகளிலும் மக்களின் இயல்பு வாழ்க்கை நாளாந்தம் தேய்ந்து தேய்ந்து பெரும் மனிதாபிமானப் பிரச்சினைகள் தோற்றமெடுத்துள்ளன.

உணவு, எரிபொருள், ஏனைய பாவனைப் பொருள்களை, ஊரடங்கு தளர்த்தப்பட்ட சிலமணிநேர இடைவெளிக்குள், அங்கும் இங்குமாக அலைந்தும், ஓடியும் பெறுவதற்காக முண்டியடிக்கவேண்டிய, வரிசை சேரவேண்டிய பரிதாபகரமான நிலை உண்டானது.

அன்றாட வாழ்க்கையை நகர்த்தி, உயிரைக் காப்பாற்றுவதற்கு மக்கள் நிமிடத்திற்கு நிமிடம் அல்லாடவேண்டிய அவலமும் அவஸ்தையும் கலந்த புறநிலை மேன்மேலும் மோசமடைந்தது.

உயிர்வாழ்வதற்கு ஆதாரமான உணவு மற்றும் மருத்துவத்திற்குரிய பொருள்களை வாங்குதவதற்கு மக்கள் பல மணி நேரத்தைச் செலவிட்டும் பெறமுடியாத நிலை தோன்றியுள்ளது. கிடைக்கக்கூடிய பொருள்களையும் யானை விலை, குதிரை விலைகளுக்கு வாங்கவேண்டியதாயிற்று. அவ்வாறு வாங்குவதற்கு வருமான வலுவற்றவர்கள் ஒருநேரக் கஞ்சி தானும் குடிக்க மற்றவர்களிடம் கையேந்தும் நிலை வந்தது.

கப்பல்கள் மூலம் உணவு மற்றும் பாவனைப் பொருள்கள் கொண்டுவரப்பட்டபோதிலும், ஒகஸ்ட் 11ஆம் திகதிக்கு முன்னர் இருந்தது போன்று - தமக்கு வசதியான நேரத்தில், தமக்குத் தேவையான பொருள்களை, பகிரங்கச் சந்தையில் தமது விருப்பத்திற்கு ஏற்ப கொள்வனவு செய்யக்கூடிய நிலை இன்னும் திரும்பவில்லை.

அன்றாட வாழ்க்கைக்குரிய தொழில் வசதிகள் மற்றும் உற்பத்தித் துறைகள் அற்றும் குறைந்தும் போன நிலையில் ஏதோ உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வாழும் நிலை உருவாகி அதுவே தொடர்ந்துகொண்டும் இருக்கிறது.

செயற்கையாக உருவாக்கப்பட்ட பலவகை வாழ்க்கை அவலங்களுடன் குடாநாட்டு மக்களை 'சிக்குன் குனியா' என்ற இயற்கையின் சோதனையும் சேர்ந்துகொண்டு இப்போது வாட்டுகிறது.

நுளம்புகளால் தொற்றும் வைரஸ் காய்ச்சல் வகைகளைச் சேர்ந்த 'சிக்குன் குனியா' அண்மைக் காலத்தில் குடாநாட்டில் அறியப்படாத ஒன்று. ஆனால், இப்போது எந்த வீட்டையும், குடும்பத்தையும் விட்டுவைக்கவில்லை என்று கூறும் அளவிற்கு கட்டுப்பாடற்ற நிலையில் அது அசுர வேகத்தில் பரவி வருகின்றது.

ஏற்கனவே மருத்துவ வசதிகளும், மருந்து வகைகளும் அருகிப்போன தருணமறிந்து குடாநாட்டு மக்களை இம்சைப்படுத்துகின்றது 'சிக்குன் குனியா'.

சுகதேகிகள், நோயாளிகள், இளைஞர்கள், மாணவர்கள், முதியவர்கள் என்று பலதரப்பினரையும் வதைத்து உருக்கி நொடித்து ஒடிக்கிறது 'சிக்குன் குனியா.'

அதற்கான உரிய போதிய மருந்து வகைகள் இல்லாத நிலையிலும் மருத்துவ வசதிகள் குறைந்த சூழலிலும் அது குடாநாட்டில் கோரத்தாண்டவம் ஆடுகிறது.

'பரசிற்றமோல்' போன்ற மருந்து வகைகள் மிக அரிதாகவே கிடைக்கின்றன. சாதாரண 'பனடோல்' குளிகை ஒன்றை 50 சதத்திற்கும் வாங்கமுடியவில்லை என்று மக்கள் குறைபடுகிறார்கள்.

முதியவர்கள், ஏற்கனவே நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், குழந்தைகள், மாணவர்களை 'சிக்குன் குனியா' தனது எதிரிகளாக்கியுள்ளது. இவர்கள் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த வகுப்பினர்.

'சிக்குன் குனியா' உயிராபத்து விளைவிக்கக்கூடியதல்ல என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்த போதிலும் -

குடாநாட்டில் பலரில் குறிப்பாக வயோதிபர்கள், நோயாளர்களின் மரணத்திற்கு இந்த அசுர நோய் மறைமுகக் காரணியாகி வருகின்றது என்பதனை நம்பாமல் இருக்க முடியவில்லை.

இதன்பின்னால் இன்னொரு மறுக்கமுடியாத காரணமும் உண்டு. நான்கு மாதங்களுக்கு மேலாக மக்கள் தமது வசதிக்கும், தேவைக்கும் ஏற்ற விதத்தில் உணவு வகைகளை உட்கொள்ளமுடியாத நிலையில் பொதுவாக எல்லோருமே போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மிகக்குறிப்பாக முதியவர்கள், நோயாளர்கள், சிறுவர்கள், மாணவர்கள் ஆகியோர் போசாக்கின்மையால் தமது நோய் எதிர்ப்பு சக்தியை முழுக்கவுமே இழந்து போன நிலைக்கு ஆளாகிறார்கள்.

அண்மையில் நடைபெற்ற ஜீ.சி.ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பரீட்சை மண்டபங்களுக்கு ஆர்வத்துடனும் விருப்பத்துடனும் சென்றிருந்த போதிலும், 'சிக்குன் குனியா' தாக்கத்தினால் பரீட்சை எழுத முடியவில்லை.

உடல் ஆரோக்கியம் நிறைந்தவர்களையே கௌவிக்கொண்டால், குறைந்தது இரண்டு வாரங்களுக்காவது உபாதை ஏற்படுத்தி உத்தரிக்கச் செய்கின்ற 'சிக்குன் குனியாவால்' பாதிக்கப்பட்ட மாணவர்களால் எவ்வாறு பரீட்சை எழுதிச் சித்தி பெற முடியும்?

'சிக்குன் குனியா' உடனடிப் பாதிப்புகளை மட்டுமன்றி வருங்காலத்தில் பல்வகைப் பாதிப்புகளுக்கும் அத்திபாரம் போடுவது மிகமிகப் பேராபத்தானது.

குடாநாட்டு மக்களை 'சித்திரவதை' செய்யும் 'சிக்குன் குனியா'வின் பாதிப்பைத் தவிர்க்கவும் தடுக்கவும் உருப்படியாக இதுவரை பரந்த அளவில் உகந்த நடவடிக்கைகள் இல்லை.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் மக்களும் நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முன்வரவேண்டும். 'சிக்குன் குனியா' தாக்கத்தை குடாநாட்டின் தேசியப் பேராபத்து (National Calamity) எனக் கொண்டு செயற்படுவது அவசியம்.

இந்தப் பேராபத்தை உணர்ந்தாவது, அரசாங்கம் ஏ-9 பாதையைத் திறந்து குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கையைத் திருப்பித் தராதா என்ற கேள்வியே இன்று குடாநாட்டு மக்கள் மனங்களில் அவாவாகி நிற்கின்றது.

## எம்.ஜீ.ஆர். நினைவு தின நிகழ்வுகள் இன்றுமுதல்

யாழ்ப்பாணம்,டிசெ.24

தமிழக முதல்வர் எம்.ஜீ.ஆரின் 19ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகளும் அனைத்துலக எம்.ஜீ.ஆர் பேரவையின் முன்னாள் தலைவர் அமரர் பொன் மதிமுகராசாவின் 8ஆம் ஆண்டு நினைவு தினமும் சுனாமியின் 2ஆம் ஆண்டு நினைவும் இன்று முதல் மூன்று தினங்கள் இடம் பெறவுள்ளன.

அனைத்துலக எம்.ஜீ.ஆர் பேரவையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

(1)

## புற்று நோயாளருக்கு நிதி உதவி; அமெரிக்கப் பேராசிரியர் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.24

புற்று நோயாளர்களில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கும் சிறுவர்களுக்கும் அவர்களின் மருத்துவம் சார் தேவைகளுக்காக உதவிநிதி வழங்கப்படவுள்ளது.

கட்டுவன், தெல்லிப்பழையைச் சேர்ந்தவரும், அமெரிக்காவில் மருத்துவ பௌதிகவியல் பேராசியராகப் பணியாற்றுபவருமான நாகலிங்கம் சுந்தரலிங்கமும் அவரது குடும்பத்தினரும் -

குடாநாட்டில் உள்ள புற்று நோயாளர்களுக்கு உதவும் பொருட்டு ஒரு தொகை நிதியை (3,68,862 ரூபாவை) தமது அன்பளிப்பாக யாழ்.போதனா வைத்தியசாலை புற்றுநோய் நிபுணர் என்.ஜெயக்குமாருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இந்த நிதியே புற்று நோயாளருக்கு வழங்கப்பட உள்ளது. இந்நிதியைப் பெறவிரும்பும் நோயாளர்களை யாழ். போதனா வைத்தியசாலையில் 26ஆம் வார்ட்டில் இயன்றளவு விரைவில் பதிவு செய்யுமாறு வைத்திய நிபுணர் கேட்டுள்ளார்.

புற்றுநோய்க்கு சிகிச்சை பெறும் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தை எடுத்து வருவது கட்டாயம் என்றும் தெரிவிக்கப்பட்டது. நோயாளர்கள் வருவதற்குச் சிரமங்கள் இருப்பின் அத்தாட்சிப் பத்திரத்தை உறவினர் மூலம் அனுப்பியும் பதிவை மேற்கொள்ளலாம்.

(அ)

## சவர்க்காரம், சலவைத்தூள் இன்றி பொதுமக்கள் பெரிதும் பாதிப்பு

தென்மராட்சி,டிசெ.24

குடாநாட்டில் சவர்க்கார வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் அனைத்து மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சவர்க்கார வகைகள், சம்போ வகைகள், சலவைத்தூள்கள் என்பவற்றை குடாநாட்டில் காண்பது அரிதாகிவிட்டது.

இவைகளின் தட்டுப்பாட்டினால் மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உட்பட அனைவரும் சுத்தமான ஆடைகள் அணிய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சவர்க்கார வகைகள், சலவைத்தூள் வகைகள் இல்லாததால் பாடசாலை மாணவர்கள் தமது சீருடைகளை சலவை செய்யமுடியாத நிலை காணப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை மாணவர்கள் சீருடையை தொடர்ந்து பயன்படுத்த முடியாததால் கலர் உடையணிந்து பரீட்சை நிலையத்திற்கு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## தொழில்நுட்பக்கல்லூரி பரீட்சை செவ்வாயன்று ஆரம்பமாகின்றது

யாழ்ப்பாணம்,டிசெ.24

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் இவ்வாண்டுக்கான பொது இறுதிப் பரீட்சை நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

நாளைமறுதினம் தொடக்கம் மின் எந்திரவியல், இலத்திரனியல், கட்டடக்கலை ஆகியவற்றுக்கான செய்முறைப் பரீட்சைகள் நடைபெறும்.

எதிர்வரும் 5ஆம் திகதி முதல் பொறியில் துறை, வர்த்தகத்துறை, தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களுக்கான எழுத்துப்பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

இந்தப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு தங்குமிடவசதி, போக்குவரத்து வசதி என்பன கல்லூரி அதிபர் என்.யோகராஜனால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மாணவர்களின் நலன்கருதி பரீட்சை முடியும் வரை 24மணிநேரம் மின் விநியோகம் மேற்கொள்ளவேண்டும் என்று கல்லூரி அதிபர் விடுத்த கோரிக்கையயை படைத்தரப்பு ஏற்றுள்ளது.

கல்லூரியில் இன்றும் நாளையும் இயங்கவிருக்கும் விசேட கருமபீடம் மூலம் மாணவர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்படும்.

அதேவேளை இவ்வாண்டு கல்வி பயின்ற மாணவர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் கல்லூரியில் வைத்து வழங்கப்படும் என்றும் அதிபர் மேலும் தெரிவித்தார்.(1-88-202)

## நாவற்குழி வீடமைப்புக்கு மின்வசதி வழங்க ஏற்பாடு

தென்மராட்சி,டிசெ.24

நாவற்குழி வீடமைப்புத் திட்டத்திற்கு விரைவில் மின்விநியோகம் கிடைக்கவுள்ளது.

இவ் வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீதிகளில் 50 தெரு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் -

300 வீடுகளைக் கொண்ட இப் பகுதியில் முதல் கட்டமாக ஒரு தொகுதி வீடுகளுக்கு மின் விநியோகம் வழங்கப்படவுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சினால் இவ் வீடமைப்புத் திட்டத்தினை நவீனமயப்படுத்தப்படும் திட்டத்தின் கீழ் மின் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## ஐந்து லட்சம் பனடோல் குளிகைகளை குடாநாட்டுக்கு எடுத்துவர அரச அதிபர் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.24

குடாநாட்டு மருந்தகங்களில் நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டையடுத்து 5லட்சம் பனடோல் வில்லைகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியுடன் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படவுள்ளன.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் இதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

நோயாளர்களின் நன்மைகருதி கூடிய விரைவில் இவை எடுத்து வரப்பட்டு, யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மருந்தகத்துக்கு வழங்கப்பட்டு பொதுமக்களுக்கு நியாய விலையில் விற்கப்படவுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை -

குழந்தைகளுக்கான பால்மா வகைகளையும் உரியவர்களை இனங்கண்டு விநியோகிக்குமாறு அரச அதிபர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். (8)

## தொழில் வாய்ப்பு இழந்த 40 குடும்பங்களுக்கு உதவி

### சில்லாலையில் இன்று வழங்கப்படும்

யாழ்ப்பாணம்,டிசெ.24

பண்டத்தரிப்பு சில்லாலைப் பகுதியில் தொழில் வாய்ப்பை இழந்து வருமானம் ஏதும் இன்றி பட்டினியால் வாடும் நாற்பது மேசன் தொழிலாளர் குடும் பங்களுக்கு சேவாலங்கா நிறுவனத்தால் இன்று உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளதாக அந்த நிறுவனத்தின் திட்டமிடல் முகாமையாளர் க.சபேசன் தெரிவித்தார்.

சில்லாலையில் உள்ள இலங்கை மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்து இந்த உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படும். (1-88)

## யாழ். பொலிஸ் நிலையத்தில் இன்று உணவுப்பொருள் விநியோகம்

யாழ்ப்பாண்,டிசெ.24

யாழ். பொலிஸ் நிலையத்தில் இன்று பொதுமக்களுக்கு நியாய விலையில் பொருள்கள் வழங்கப்படவிருக்கின்றன.

அரிசி, மா, பால்மா போன்ற பொருள்கள் வழங்கப்படும் என பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.(1)

## நாளை

மார்கழி 10
திங்கட்கிழமை
25.12.2006
திதி : பஞ்சமி
பிற்பகல் 02.29
நட்சத்திரம் : அவிட்டம்
முற்பகல் 09.59
[illegible]
[illegible]

## தென்மராட்சி கல்வி வலயத்தில் 100 மாணவர் புலமைப்பரீட்சையில் சித்தி

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 100பேர் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய மாணவன் 167 புள்ளிகளைப்பெற்று வலய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையைச் சேர்ந்த 34 மாணவர்கள் பரீட்சையில் சித்தி பெற்று வலய மட்ட சாதனை படைத்துள்ளனர்.

சித்தி பெற்ற ஏனைய பாடசாலை மாணவர்களின் விவரம் வருமாறு:

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் தலா 9 மாணவர்கள்.

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம், கச்சாய் அ.த.க.பாடசாலை தலா 5, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் தலா 4, மட்டுவில் சந்திரமௌலீசர் வித்தியாலயம் 1, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, மட்டுவில் மகாவித்தியாலயம், நாவற்குழி மகாவித்தியாலயம், உசன் இராமநாதன் ம.வி, மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி, மிருசுவில் அ.த.க.பாடசாலை, குடமியன் அ.த.க.பாடசாலை தலா 2, மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம், நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தி, சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை, கல்வயல் சண்முகானந்தா வித்தியாலயம், சரசாலை ஸ்ரீகணேசா வித்தி, கொடிகாமம் அ.த.க. பாடசாலை, கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், வரணி ம.வி தலா 1, என்ற நிலையில் மாணவர்கள் சித்தி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முறை மாற்றங்கள் தொடர்பான ஐ.தே.கவின் யோசனை 27இல் கையளிப்பு

கொழும்பு,டிசெ.24

தேர்தல் முறை மாற்றம் தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சியின் இறுதி யோசனைகள் இம்மாதம் 27ஆம் திகதி கையளிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனான விசேட பேச்சினை அடுத்து, இந்த இறுதி யோசனையைப் பெற்றுக்கொள்ளவிருப்பதாக நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறையில் மாற்றம் செய்வது குறித்து ஐக்கிய தேசியக் கட்சிப் பிரதிநிதிகளுடன் பல சுற்றுப்பேச்சு நடத்தப்பட்டுள்ளன.

இந்தப் பேச்சுக்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்களில் இணக்கம் ஏற்படுத்துவதே எதிர்க்கட்சித் தலைவருடனான சந்திப்பின் நோக்கம் எனவும் தினேஷ் குணவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவருடனான நாடாளுமன்றத் தெரிவுக் குழுத்தலைவரின் சந்திப்பு விரைவில் நடைபெறவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(1-12)

## மீசாலையில் கிரனேட் வீச்சு

யாழ்ப்பாணம்,டிசெ.24

மீசாலை ஐயா கடையடிப் பகுதி காவலரண் மீது நேற்று முன்தினம் காலை 7.10 மணிக்கு கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது. சேதவிவரம் தெரியவரவில்லை.

சமாதான முயற்சிகள் மீள ஆரம்பிக்கும்வரை

# சுனாமிக் கட்டமைப்புக்கான உதவிகளை இலங்கைக்கு வழங்குவதை நிறுத்தவும்

## சர்வதேச நாடுகளிடம் ஜேர்மனி வலியுறுத்து

பேர்ளின், டிசெ.24

இலங்கையில் தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் மீண்டும் ஆரம்பமாகும் வரை சுனாமிக் கட்டமைப்புக்கான நிதி உதவிகளை அந்த நாட்டுக்கு சர்வதேச சமூகம் நிறுத்திவைக்க வேண்டும். இவ்வாறு கேட்டுள்ளார் ஜேர்மனி அபிவிருத்தி உதவி அமைச்சர் வைஸ்சோரிக் சியூல்.

இத்தகவலை ஜேர்மனியில் இருந்து வெளிவரும் பத்திரிகையை மேற்கோள் காட்டி ''இர்னா'' செய்தி ஏஜென்சி அறிவித்துள்ளது.

இலங்கையில் சிவில் யுத்தம் மீண்டும் வெடித்துள்ளதாலும் தமிழ்ப்பிரதேசங்களில் மோதல்கள் நடைபெறுவதாலும் அந்த நாட்டுக்கு வழங்கும் நிதி உதவிகளை ஜேர்மனி அரசு நிறுத்திவிட்டது.

ஏனைய மேற்கு நாடுகளும் இதே போன்று செயற்பட்டு சுனாமி மீள் கட்டமைப்புக்கான உதவிகளை வழங்காது நிறுத்துவது நல்லது எனக்கருகிறேன் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் சுனாமியால் சேதமடைந்த கட்டமைப்புக்களை சீராக்க 19 மில்லியன் யூரோவை ஜேர்மனி இலங்கைக்கு வழங்க ஒதுக்கீடு செய்திருந்தது. அந்த நிதி இப்போது இந்தோனேசியாவில் சுனாமி மீள்கட்டுமானத்துக்கு வழங்கப்படவிருக்கின்றது - என்று ஜேர்மனி அறிவித்துள்ளது. (அ-1)

# மனித உரிமைகளை மீறும் விவகாரத்தில் தென்னாசியாவில் இலங்கைக்கு 6ஆம் இடம்

கொழும்பு,டிசெ.24

தெற்காசிய நாடுகளிடையே மனித உரிமை மீறல்கள் விடயத்தில் இலங்கை 6ஆவது இடத்தை பெற்றுள்ளதாக தெற்காசிய மனித உரிமைகள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்காசிய அமைப்பில் 7நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இதில் மனித உரிமை மீறல் விடயத்தில் 6ஆவது இடத்தை இலங்கை வகிப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதுடில்லியில் நடைபெற்ற இந்த அறிக்கையை வெளியிடும் நிகழ்வில் உரையாற்றிய மனித உரிமைகள் ஆசிய நிலையத்தின் தலைவர் சுஹாஸ் சக்மா இலங்கையில் 2002ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை மீறப்படுதல் காரணமாக தமிழர்கள், ஊடகவியலாளர்கள், அரசியல் வாதிகள், அப்பாவி மக்கள் ஆகியோர் காணாமல் போகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

தெற்காசிய மனித உரிமைகள் மீறல்களில் பூட்டான் முதலிடத்தை வகிக்கிறது. நேபாளம், மாலைதீவு, பாகிஸ்தான் என்ற நாடுகள் இரண்டாம் இடத்திலிருந்து நான்காம் இடம் வரைக்கான இடங்களில் இருக்கும் அதேநேரம் இந்தியா 7ஆம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி இலங்கையில் தமிழ் ஊடகவியலாளர்கள் படையினராலும் ஆயுதக்குழுக்களாலும், ஜே.வி.பி போன்ற குழுக்களாலும் இலக்கு வைக்கப்படுகிறார்கள்.

இந்த வகையில் இரண்டு ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். 6 பேர் உடல் ரீதியான வதைகளுக்கு உள்ளானார்கள். நான்கு ஊடகவியலாளர்கள் கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளானார்கள் என தெற்காசிய மனித உரிமைகள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1)

# 6,000 கிலோ பொருள்கள் அவசரமாக விமானமூலம் வந்தன

## இன்று தொடக்கம் நலன்புரி நிலையங்களில் விற்பனைக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.24

குடாநாட்டு மக்களுக்கு அவசரமாகத் தேவைப்படும் சத்து நிறைந்த பால்மா வகைகள், பிஸ்கட், மருந்துப் பொருள்கள் என்பன நேற்று விமானம் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆறாயிரம் கிலோகிராம் பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளன என்றும் -

அவை படையினரின் நலன்புரி நிலையங்கள் ஊடாக இன்று முதல் மக்களுக்கு விற்பனை செய்யப்படவிருக்கின்றன என்றும் அதே வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ-1)

## பழம்பெரும் ஈழத்தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிபுரிந்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிறுவுநர்களில் ஒருவரான அவர் தமிழரசுக்கட்சியின் மூளை என வர்ணிக்கப்பட்டவர்.

ஊர்காவற்றுறைத் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தவர்.

இலங்கைத் தமிழரசுக்கட்சி சிங்களத் தலைவர்களுடன் நடத்திய சகல பேச்சுவார்த்தைகளிலும் கலந்து கொண்டவர். டட்லி - செல்வா ஒப்பந்தத்தைத் தயாரித்ததில் பிரதான பங்கு வகித்தவர்.

அடையா அட்டைச்சட்டத்தை எதிர்த்து வாக்களித்தார். அதனால் உண்டான கருத்து வேற்றுமையினால் தமிழரசுக் கட்சியில் இருந்து 1967ஆம் ஆண்டில் விலகினார்.

தமிழர்கள் தமக்கென ஒரு நாட்டை உரு வாக்கவேண்டும் என்ற கோட்பாட்டை வைத்து அதே வருடத்தில் தமிழர் சுயாட்சிக் கழகத்தை நிறுவினார்.

''இலங்கை பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறது'' (Ceylon Faces Crisis) என்ற நூலை 1956ஆம் ஆண்டு எழுதி வெளியிட்டு, இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு முதலில் கொண்டு வந்தவர் தலைவர் நவரத்தினம் அவர்களே.

அதன் பின்னர் 1995ஆம் ஆண்டில் தமிழ்த் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும் (The Fall and Rise of the Tamil Nation) என்ற நூலை எழுதினார்.

இலங்கை சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டம் வரை இடம்பெற்ற அரசியல் நிகழ்வுகளை உள்ளடக்கியது இந்நூல்.

(இந்த நூலின் தமிழ் வடிவம் உதயனின் சகோதரப் பத்திரிகையான ''சுடரொளி'' யின் வார இதழில் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கிறது )

அரசியல் பெரியார் நவரத்தினத்தின் இறுதிச்சடங்குகள் இம்மாதம் 26ஆம் திகதி மொன்றியலில் நடைபெறும்.

(அ)

## இளைஞர் சுட்டுக்கொலை

கொடிகாமம், கச்சாய் வீதியில் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார். கொடிகாமம், தவசிகுளத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி கேதீஸ்வரன் (வயது 34) என்பவரே உயிரிழந்தவராவார். பிரஸ்தாப நபரும் நல்லதம்பி ராஜதுரை (வயது 63) என்பவரும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தனர். அப்போது அவர்களை வழிமறித்த ஆயுததாரிகள் பிரஸ்தாப நபரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர். இறந்தவரின் சடலமும் யாழ். ஆஸ்பதிரிக்கு எடுத்துவரப்பட்டுள்ளது. (அ-1-78)

## புலிகள் நடத்திய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அட்மிரல் டி.கே.எஸ்.திஸ்ஸநாயக்கா நேற்றைய கப்பல் விவகாரம் தொடர்பாக பி.பி.ஸி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உண்மையில் ஜோர்டான் நாட்டைச் சேர்ந்த 'பறா - 3' என்ற கப்பல் இந்தியாவின் காக்கிநாடா பகுதியில் இருந்து தென்னாபிரிக்காவின் டர்பன் நகருக்கு 14 ஆயிரம் தொன் அரிசியை ஏற்றிக் கொண்டு பயணித்துக் கொண்டிருந்தது.

அந்தக் கப்பல் முல்லைத்தீவுக்கு அருகில் வரும் போது, அதன் இயந்திரம் பழுதடைந்து விட்டது. பின்னர் கப்பல் கடலலையால் தள்ளப்பட்டு அசைந்து கொண்டிருந்தது.

நேற்று அதிகாலை 3 மணியளவில் பிரிட்டனில் உள்ள கடல்சார் உதவி ஒருங்கிணைப்பு மையத்திற்கு கடல் கொள்ளையரால் கப்பல் தாக்குதலுக்கு உள்ளாகியிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கின்றது. அந்த நிறுவனத்திடமிருந்து இலங்கைக் கடற்படைக்கும் அந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது. கப்பலுடன் தொடர்பு கொள்ள நாங்கள் முயற்சி செய்தோம். ஆனால் தொடர்பு கொள்ள முடியவில்லை.

முல்லைத்தீவிற்கு வட-கிழக்கில்

இந்தக் கப்பல் முல்லைத்தீவிற்கு வடகிழக்கே 3 மைல்களுக்கு அப்பால் இருந்ததை நாங்கள் அவதானித்தோம். அந்தக் கப்பலில் பயணித்த 25 மாலுமிகளின் நிலை குறித்து எங்களுக்கு எதுவுமே தெரியாது. அவர்களில் 15 பேரைக் காப்பாற்றிக் கரைக்குக் கொண்டு வந்திருப்பதாக விடுதலைப்புலிகள் கூறியிருக்கின்றார்கள். ஏனைய 10 பேர் கப்பலில் இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

தற்போது கப்பலில் உள்ளவர்களின் பாதுகாப்புக் கருதி இராணுவ நடவடிக்கை எதனையும் எடுக்க முடியாத நிலை உள்ளது. இது குறித்து நாங்கள் கப்பல் உரிமையாளர், உள்ளூர் தூதரகம், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு என்பவற்றிடம் தகவல் தெரிவித்திருக்கின்றோம்.

விடுதலைப்புலிகள் சர்வதேச கடல் சார் சட்டத்தை மீறியுள்ளனர். அவர்கள்தான் இத்தாக்குதலுக்கு பொறுப்பு - என்றார். (அ-12)

## 25 மாலுமிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடமாடியுள்ளன. கப்பலை அவதானிப்பதற்காக கடற்புலிகளின் படகுகள் அக்கப்பலை நோக்கிச் சென்றன. அதன்போது அந்தக்கப்பல் ஒரு வணிகக்கப்பல் என்பதையும் கடல் கொந்தளிப்புக்கு மத்தியில் இயந் திரம் பழுதடைந்த நிலையில் கப்பல் தத்தளித்துக் கொண்டிருந்ததை கடற்புலிகள் உறுதிப்படுத்தினர்.

கப்பலை வழி நடத்த முடியாத நிலையில், கடல் கொந்தளிப்புக்கு மத்தியில் நின்ற கப்பலில் இருந்த 25 மாலுமிகளையும் காப்பாற்றி கரைக்குள் கொண்டு வந்தனர்.

கப்பலைக் கரைக்குக் கொண்டுவர முடியாத நிலை காணப்படுகின்றது. ஆனால் கடல் நீரோட்டத்தில் அது கரைநோக்கி வருவது அவதானிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட மாலுமிகள் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றனர். அவர்கள் இன்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற்றும் கண்காணிப்புக் குழு அதிகாரிகளிடம் கையளிக்கப்படுவர். கப்பலை மீட்டுச் செல்ல ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கின்றோம் என்றார் அவர். (அ-1)

## வாகரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்ட இத்தாக்குதல் எட்டு மணிநேரம் தொடர்ந்தது. வாகரை மருத்துவ மனைக்கு அருகாகவும் கதிரவெளி, கண்டலடி, பாற்சேனை, வம்மிவெட்டுவான், வெள்ளியாடைமடு ஆகிய கிராமங்களில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

**NEW SCIENCE HALL**
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்.
2009 A/L
★ கணித, உயிரியல் பிரிவு ★
★ எமது வழமையான ஆசிரியர் குழு★
ஆரம்பம்:
01.01.2007
திங்கள் காலை 10 மணி

வெற்றிவழி விசேட வகுப்பு
A/L தமிழ் 2008, 2007 & Day
♦ இலக்கணம்
♦ ஈழத்திலக்கிய வரலாறு
நாக தமிழிந்திரன்
திங்கள் - வெள்ளி 11-1 மணி
♦ கையேடுகள் இலவசம்
♦ முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும்.
♦ 2009 மாணவர்களுக்கு இவ்வகுப்பு இலவசம்.
PROPRIETER : N.POOPALASINGAM
BEACON - யாழ் நகர்.

2006 O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே!
உங்கள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகும் வரையுள்ள பொன்னான காலத்தை
"சீபி" இல் கணினிக் கல்வியுடன் இணைந்து பயனுள்ளதாக்குங்கள்.
உங்கள் பதிவுகளை இன்று முதல் எமது நிறுவனத்தில் மேற்கொள்ளலாம்.
Batch Starts On 01.01.2007 (Monday)
மேலதிக விபரங்களுக்கு நேரில்.
CB Computer Academy
T.P No.021-4590291 Station Road, Kondavil.

Speed IT net இன் கணினி பயிற்சிகள்
மிகக்குறைந்த கட்டணத்தில் குறுகிய காலப்பகுதியில்
இன்ரநெட் ஈமெயில், விசுவல் பேசிக், வெப்டிசைனிங்,
கொம்பியூட்டர் காட்வெயார், எம் எஸ் ஒபீஸ், ஐ.சி.ரி
From 1000/-
and We are Providing .. Latest MP3 Audio CDs
Computer Repair, PC & Accessories Sale,Software CDs,
Software/Web Design, Computer Maintenance,Hosting
Flash Disks(256MB,512MB) From 1550/-
72/28 பணிக்கர்லேன்,திருநெல்வேலி
தொலைபேசி: 4591871 ,0777 563213
வெப்தளம் [illegible]
சக நிறுவனம்
A2Z Com.Com
192 நாவலர் வீதி

O/L எடுத்த மாணவர்களுக்கான
MS Office, D.T.P, GIT
A/L - 2009
புதிய பிரிவுகள்
ஆரம்பம் 25.12.2006
திங்கள் காலை 9 மணி
திகழ் கல்வி நிறுவனம்

SKY COMPUTERS (PVT) LTD.
No. 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021 - 4590325 : Fax: 021 - 4590325
Affiliated with Irish International University (U.K)
விடுமுறைகாலப் பயிற்சி நெறிகள்
MS Office 1 Month
Desk Top Publishing 1 Month
Computerized Accounting 1 Month
Hardware Technology 1 Month
KIDS Program சிறுவர்களுக்கான பயிற்சி நெறி
Internet & E-mail 2weeks. Only 1000/=
உடன் விரையுங்கள்
தனிப்பட்ட அனுமதிகளும் வழங்கப்படும்
E - mail : skycomputers_2@yahoo.com
Today you learn Tomorrow you lead

பௌதிகவியல்
மாதிரிப் பரீட்சை
திங்கள் 2 - 4.30
25.12.2006
பரீட்சையின் மீட்டல்
27.12.2006 புதன்
K.SELVAN
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்.

திருநெல்வேலியில்
A/L 2007, 2008
DAY CLASS
கலை, வர்த்தகப்
பிரிவுகள் ஆரம்பம்
25.12.2006 mon 10 a.m.
நாவலர்
பலாலி வீதி, திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.12.2006இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.